
நகரத்தார் குரல்



காலம் கடந்த கடவுள் நெஞ்சக் கருணைக் கொருதேவி
கன்னிகை யாகக் குமரிக் கடலில் காட்சி கொடுக்கின்றாள்
சீலம் மிகுந்த விவேகா னந்தர் செய்யும் தவத்தாலே
திகழும் குமரி அடியை வணங்கிச் செந்தமிழ் பாடிடுவோம்

டிசம்பர் 1990

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 9

ஒலி 11

பிரமோதூத

கார்த்திகை

டிசம்பர்

1990

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

தொலைபேசி p. p. 26668

கருத்தனைப் பாடமாட்டேன் காம்பன தோளிபங்கா
ஒருத்தரால் அறிய வொண்ணாத் திருவுரு வுடை சோதீ!
திருத்தமாம் தில்லை தன்னுள் திகழ்ந்தசிற் றம்பலத்தே
நிருத்த நான் காண வேண்டி நேர்பட வந்த வாறே

— திருநாவுக்கரசர்

ஆண்டுச் சந்தா ரூ. 24-00 டெபாசிட் சந்தா ரூ. 200-00

இயற்பகை நாயனுர் திருவிழா

தஞ்சாவூர் மாவட்டம் காவிரிப் பூம்பட்டினத்தில் திருச்சாய்க்காடு என்னும் சாயாவனத்தில் அமைந் திருக்கும் திருச்சாய்க் காடுடை யார் திருக்கோயிலில் இல்லையே என்னுத இயற்பகை நாயனுர் திருவிழா 4-1-91 (மார்கழி மீ 20 வ) முதல் 8-1-91 (மார்கழி மீ 24 வ) வரை ஐந்து நாட்கள் கொண்டாடப்பட உள்ளது.

நிகழ்ச்சி நிரல்

4-1-91 வெள்ளிக்கிழமை. 1 ஆம் திருநாள். மாலை அனுக்ஞை விநாயகர் வழிபாடு. இயற்பகை நாயனுர் திருஅவதாரம்.

5-1-91 சனிக்கிழமை. 2 ஆம் திருநாள். மாலை கற்பினுக்கு அரசியாரின் திருமணத் திருக்கோலம். இரவு திருமணத் தம்பதியர் முத்துப் பல்லக்கில் திருவீதி உலா வருதல்.

6-1-91 ஞாயிற்றுக்கிழமை. 3 ஆம் திருநாள். காலை பஞ்ச மூர்த்திகள் அபிஷேகம். பகல் உத்திர நட்சத்திரத்தில் இயற்பகை நாயனுரின் குருபூசை. இயற்பகை நாயனுரின் செயற்கரிய செயலை உலகறியச் செய்ய வேண்டி பிட்சாடனுர் சிவனடியார் வேடத்தில் எழுந்தருளல்.

7-1-91 திங்கட்கிழமை. 4 ஆம் திருநாள். ஐராவதத் திருக்குளத்தில் தீர்த்தம் கொடுத்தல்.

8-1-91 செவ்வாய்க்கிழமை. 5 ஆம் திருநாள். விடையாற்றி.

இத்திருவிழாவையொட்டி சமய, இலக்கியச் சொற்பொழிவுகள், கதை விரிவுரை நடைபெறுமென்றும் திருவிழாவிற்கு வருகை தரும் நகரத்தார்களுக்கு சாப்பாடு, தங்கும் வசதி செய்துதரப்படுமென்றும் திரு. பழ. தெ. லெ. அருணுசலம் செட்டியார் தெரிவித்துள்ளார்.



''நகரத்தார் குரல்'' இதழின் துணை ஆசிரியர் ஒக்கூர் திரு. நா. லெ. சுந்தரம் செட்டியாரின் புதல்வன் செல்வன் லெட்சுமணன் B. Sc க்கும் அலவாக்கோட்டை திரு. சிவ. நா. ராம. லெ. சீனிவாசன் செட்டியாரின் புதல்வி செல்வி அலமேலுவுக்கும் 22-11-90 அன்று அலவாக்கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

"சாரி.. ராங் நம்பர்!"

ஒரு செட்டியார் தன்னுடைய ஆச்சிக்குப் ஃபோன் செய்தார். "இன்னும் கொஞ்ச நேரத்தில் 4, 5 நண்பர்களுடன் நான் வீட்டுக்குப் பலகாரம் சாப்பிட வருகிறேன். செய்து வை" என்று. "நான் அவசியம் செய்து வைக்கிறேன். நீங்கள் உடனே வாருங்கள்" என்று ஃபோனில் பதில் கிடைத்தது. செட்டியாருக்குச் சந்தேகம். "சாரி ராங் நம்பர்" என்று சொல்லி ஃபோனை வைத்து விட்டார். ஏனென்ருல் தன்னுடைய வீட்டு ஆச்சியைப் பற்றி அவருக்கு நன்ருகவே தெரியும். "வேறு வேலையில்லே. இவருக்கு இதே தான் பொழப்பு" என்று அந்த ஆச்சி பலமுறை சொல்லியதுண்டு. அப்படி இருக்கக் கூடாது. செட்டியார் சொன்ஞல் மறுபேச்சுப் பேசக் கூடாது. வாழ்க்கையிலே இது ரொம்ப முக்கியம்.

ஒரு திருமணத்திலே மோதிரம் மாற்றிக் கொள்கிற சடங்கு வந்தது. பையன் மணப்பெண்ணின் விரலில் அழகாய் மோதிரத்தைப் போட்டு விட்டான். பெண்ணைப் போடச் சொன்ஞர்கள். "ஊஹூம்.. நான் மாட்டேன்" என்று அந்தப் பெண் மறுத்தாள். "ஏம்மா? இது சடங்கு, சம்பிரதாயம், போடவேண்டியது தானே!" என்றனர். "இல்லை — இல்லை. அவுங்க போட்டது அரைப்பவுன். நான் போடப் போவது ஒரு பவுன்" என்ருள், அந்தப் பெண். ஒரு அரைப் பவுனை விட்டுக் கொடுக்காத பெண்ணின் வாழ்க்கை எப்படி இருக்கும்? சற்று சிந்தித்துப் பாருங்கள்!

— லேஞ தமிழ்வாணன்

(அலவாக்கோட்டையில் 22–11–90 அன்று நிகழ்ந்த "நகரத்தார் குரல்" இதழின் துணை ஆசிரியர் திரு. எல். சுந்தரத்தின் புதல்வன் செல்வன் லெட்சுமணன்— செல்வி அலமேலுவின் திருமண வாழ்த்தரங்கில் கூறியது)

அறங்காவலர் குழுத் தலைவருக்குப் பாராட்டு விழா

நடராசபுரம் இராமசாமிச் செட்டியார் நினைவு உயர்நிலைப் பள்ளி, இராமாயி நினைவுத் தொடக்கப் பள்ளி ஆகியவற்றின் சார்பில் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. இராம. இராமநாதன் என்ற சேதுச் செட்டியார் அவர்களுக்கு 21-11-90 அன்று நடராசபுரத்தில் திருப்பத்தூர்த் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். தென்னரசு அவர்கள் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இராம. இராமநாதன் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தி வாழ்த்துரை வழங்கினார்கள். பள்ளிச் செயலாளர் இராம. முருகப்பச் செட்டியார் அவர்கள் விழாவுக்கு முன்னிலை வகித்தார்கள். காரைக்குடி நகர் மன்றத் தலைவர் திரு. சித. சிதம்பரம், சிவகங்கை நகர் மன்றத் தலைவர் திரு. சொ. லெ. சாத்தையா, நடராசபுரம் பழைய மாணவர்கள் சங்கத் தலைவர் திரு. சுப. உலகப்பன், பழைய மாணவர்கள் சங்கச் செயலாளர் பேராசிரியர் திரு. எஸ். இராயப்பன், அறங்காவலர் குழு உறுப்பினர் திரு. செல்வராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பல கிராமங்களின் சார்பாக திரு. இராம. இராமநாதனுக்கு மாலைகள் அணிவிக்கப் பெற்றன. பின்னர் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பள்ளித் தமிழாசிரியர் திரு. மெய்யப்பன் வாழ்த்துப் பா வாசித்து வழங்கினார். வந்திருந்த அனைவரையும் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. சுப. கருப்பையா வரவேற்று உரையாற்றினர். தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. சி. நாகராசன் நன்றி கூறினர். மதுரை அனந்தராமன் குழுவினரின் இன்னிசை விருந்து நடைபெற்றது.

கூட்டு வழிபாடும் கவியரங்கமும்

''பழம் நீ'' பாதயாத்திரைக் குழுவின் சார்பில் 5-1-91 சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் மதுரை நகரவிடுதியில் கூட்டு வழிபாடும் 6-1-91 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி அளவில் மதுரை வடக்காடி வீதியில் உள்ள திருவள்ளுவர் கழகத்தில் முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் தலைமையில் ''வணங்கள் காட்டும் வடிவேலன்'' என்ற பொதுத் தலைப்பில் கவியரங்கமும் நடைபெற உள்ளன. விழாவில் அருளாடியார் பழ. பழநியப்ப செட்டியார் அவர்கள் வருகைதந்து சிறப்பிக்க இருக்கிறார்கள். இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அமைப்பாளர் லெ. மு. முத்து மாணிக்கம் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோவிலின் அறங்காவலர்கள்

பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் கோவிலின் அறங்காவலர்களாக கண்டவராயன்பட்டி திரு. கரு. நா. லெ. நாராயணன் செட்டியாரும் காரைக்குடி திரு. நா. சித. ராம. வெங்கடாசலம் செட்டியாரும் 8-11-90 முதல் ஓராண்டுக்குப் பொறுப் பேற்றுள்ளனர். இவர்கள் பாரம்பரிய அறங்காவலர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

எமது
நல்வாழ்த்துக்கள்!

'எல்லெஸ்' இல்லத் திருமண விழா

''நகரத்தார் குரல்'' இதழின் துணை ஆசிரியர் ஒக்கூர் திரு. நா. லெ. சுந்தரம் செட்டியாரின் புதல்வன் செல்வன் லெட்சுமணன் B. Sc. க்கும் அலவாக்கோட்டை திரு. சிவ. நா. ராம. லெ. சீனிவாசன் செட்டியாரின் புதல்வி செல்வி அலமேலுவுக்கும் அலவாக்கோட்டையில் 22-11-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்த்தரங்கம்

திருமண விழாவையொட்டி அலவாக்கோட்டையில் ''நகரத்தார் குரல்'' இதழின் ஆசிரியர் 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் ஸ்ரீகற்பகாம்பாள் மில்ஸ் லிட்., நிர்வாக இயக்குநர் 'இலக்கியச் சிந்தனை' திரு. ப. லெட்சுமணன் அவர்கள் முன்னிலையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. பேராசிரியர் திரு. ஏஎல். சீனிவாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள், திரு. ப. லெட்சுமணன் அவர்களின் வாழ்த்துரையைத் தொடர்ந்து ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் - இளைய தலைமுறையின் வழிகாட்டி திரு. லேனா தமிழ்வாணன் அவர்கள், 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் அவர்கள், புலவர்மாமணி திரு. மா. முத்துராமன் அவர்கள், திரு. எம். சிஎன். மாணிக்கம் அவர்கள், திரு கேஎம். தமிழரசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மணமகனின் தங்கை மகள்கள் சார்பாக 'புலவர் மாமணி' திரு. மா. முத்துராமன் அவர்கள் வாழ்த்துமடலை வாசித்தளித்தார்கள். வாழ்த்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு திரு. நா. லெ. சுந்தரம் பொன்னாடை அணிவித்தார். இறுதியில் அவர் நன்றி தெரிவித்துப் பேசினார்.

திருமண விழாவில் தொழிலதிபர்கள் வணிகர்கள் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நண்பர்கள் பெருமளவில் கலந்து கொண்டு வாழ்த்திச் சிறப்பித்தனர்.


வாழ்த்துச் செய்திகள்

மணமக்களை வாழ்த்தி தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு. மு. தமிழ்க்குடிமகன் அவர்கள், தமிழக முன்னாள் அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள், திரு. ஏஆர். இராமசாமி அவர்கள், ஏவி. எம். ஸ்டுடியோவின் நிர்வாக இயக்குநர் திரு. எம். சரவணன் அவர்கள், சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி மாண்புமிகு ஏஆர். லெட்சுமணன் அவர்கள், மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி அவர்கள், கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞானதேசிக சுவாமிகள், துலாவூர் ஆதீனத்தின் குரு தவத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள், 'தத்புருஷதேசிகர்' பாலகவி வே. இராமநாதன் செட்டியார் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு. ஆர் எம். சேதுநாராயணன், திரைப்பட நடிகர் திரு. கமலஹாசனின் மானேஜர் திரு. தே. ந. சுப்பிரமணியன் தொழிலதிபர்கள் திரு. எல். நாராயணன் செட்டியார், திரு. சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார், திரு. ஆர்எம். அருணாசலம், திரு. சி. முத்துராஜா, திரு. வி. சாத்தப்பன், தியாகராசர் கல்லூரியின் முதல்வர் முனைவர் திரு. எஸ். சொக்கலிங்கம், முன்னாள் முதல்வர் முனைவர் திரு. சுப. அண்ணாமலை, முனைவர் திரு. தமிழண்ணல், முனைவர் திரு. ஆறு. அழகப்பன்,

முனைவர் திரு. பழ. முத்தப்பன், முனைவர் திரு. வெ. சு. அழகப்பன், முனைவர் திரு. இராம. சுந்தரம், வானதி பதிப்பகம் திரு. ஏ. திருநாவுக்கரசு, திரு. வ. சுப. சொக்கலிங்கம், பேராசிரியர் திரு. கண. சிற்சபேசன், திரு. மாணிக்கம் முத்தையா, கவிஞர்கள் திருவாளர்கள் சோம. சிவப்பிரகாசம், இராகவன்முத்து, சேது. அருணசலம், கு. செ. இராமசாமி, T. குமரப்பன், ரா. பொன்ராசன் மணிமேகலைப் பிரசுரத்தின் பங்குதாரர் திரு. ரவி தமிழ்வாணன், ''நகரத்தார் இத''ழின் ஆசிரியர் திரு. சுப. செந்தமிழன், ''தமிழ்ப் பாவை'' இதழின் ஆசிரியர் திரு. கருணைதாசன் மற்றும் ஏராளமானவர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

திருமணம்

தேவகோட்டையில் 'காசிஸ்ரீ' திரு. வயிரவன் புதல்வி செல்வி பார்வதிக்கும் செல்வன் வெங்கடாசலத்துக்கும் 8-11-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்த்தரங்கிற்கு 'அறமனச் செம்மல்' திரு. நாக. இராமநாதன் செட்டியார் தலைமை தாங்கினர். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன், பேராசிரியர் திரு. கண. சிற்சபேசன், திரு. கயி. திருநாவுக்கரசு செட்டியார், திரு. ஜோதிகிருஷ்ண, திரு. இளைய பெருமாள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



கடியாபட்டி திரு. முரு. கா. அண. சொக்கலிங்கம் செட்டியாரின் (H. A. L. Detachment. Madras) புதல்வன் செல்வன் காசிவிஸ்வநாதன் என்கிற பாஸ்கருக்கும் பூலாங்குறிச்சி திரு. அ. பழ. நாராயணன் செட்டியாரின் புதல்வி செல்வி வள்ளியம்மை என்கிற சித்ராவுக்கும் 26-8-90 அன்று பூலாங்குறிச்சியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஆசிரியருக்குக் கடிதம்

நகரத்தாரே சிந்தியுங்கள்!

நம்மினத்தில் சீர்திருத்தம் பேசும் பலர் திருமணத்தில் வரதட்சணை வாங்கக் கூடாது என்று கூறுகிறார்கள். அப்படிக் கூறும் இவர்களில் எத்தனை பேர் வரதட்சணை வாங்காமல், கொடுக்காமல் திருமணம் செய்தார்கள்?

நம்மினத்தில் வசதி படைத்தவர்கள் வரதட்சணை கொடுத்தும், வாங்கியும் திருமணத்தை நடத்தும்போது மற்றவர்கள் அவர்களைப் பார்த்துக்கொண்டு சும்மா-வா இருப்பார்கள்? அவர்களும் அதையே பின்பற்றுகிறார்கள். பையன் படித்தவனுயும் பணக்காரனாயும் இருந்துவிட்டால் அவனுக்கு வாங்கும் தொகை மிக அதிகம். தங்கம் விற்கும் விலையில், தாலிக்கே தங்கம் வாங்க முடியாத நிலையில், 'இரண்டு நகை, மூன்று நகை வைரத்தில் வேண்டும்' என்று கேட்கிறார்கள். வசதிக்குறைவானவர்கள் எப்படிப் போடுவது? சற்று யோசியுங்கள் ஆச்சிமார்களே!

மிக வசதி படைத்தவர்கள், வசதி படைத்தவர்கள் தன் மகனுக்கோ மகளுக்கோ வரதட்சணை வாங்காமல், கொடுக்காமல் கோயிலில் வைத்து எளிமையான முறையில் திருமணம் செய்ய வேண்டும். அப்போதுதான் நம் சமூகம் திருந்தும். வாய்ச்சொல்லில் வீரர்களாக நாம் இருப்பதை விடுத்து சீர்திருத்தத்தைச் செயலில் காண்பிக்கவேண்டும். இல்லையென்றால் நம் பெண்கள் வரதட்சணை கொடுக்க முடியாமல், வேறு இனத்தவரை மணந்துகொள்ள நேரிடும். இதனால் நம் இனத்துப் பையன்கள் எல்லாம் 'பிரம்மசாரிகள்' ஆகிவிடும் நிலைமையும் வந்துவிடும்.

இந்தக் கொடிய வரதட்சணைப் பிரட்சினை தொடர்ந்தால் எங்களின் நிலைமையெல்லாம் கேள்விக் குறிதான். எங்கள் வீட்டிலேயே கூட நாங்கள் மூன்று பெண்கள் இருக்கிறோம். எங்கள் திருமணத்திற்காகப் பணம் சேர்க்க எங்கள் தந்தை படும்பாட்டைப் பார்த்தால் ஏன் இந்தச் சமூகத்தில் பிறந்தோம் என்ற கவலை ஏற்படுகிறது; வெறுப்பு ஏற்படுகிறது.

இது கட்டுரையல்ல! எங்களைப் போன்ற நம்மினத்துப் பெண்களின் குமுறல்!

இதைப் படித்த பிறகாவது நம் இனத்தார் திருந்தட்டும்; நம் இளைஞர்களும் வரதட்சணை வாங்காமல் திருமணம் செய்து கொள்ள முன்வரட்டும்; எங்களின் பிரச்சினை தீரட்டும்; நம் சமூகம் உயரட்டும்.

இப்படிக்கு,

N. விஜயலெட்சுமி
N. நித்தியகல்யாணி (B.Com)
N. ஆனந்தவள்ளியம்மை

மதுரை நகர விடுதியில் பிள்ளையார் நோன்பு

சென்ற ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் வருகிற 23-12-90 (மார்கழி மீ 8 உ) ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணி அளவில் மதுரை நகர விடுதியில் பிள்ளையார் நோன்பு கொண்டாடப்பெறவிருக்கிறது. இழை எடுத்துக் கொள்ள விரும்புபவர்கள் 15-12-90க்குள் விடுதி அலுவலகத்தில் நபர் 1க்கு ரூ. 5/- வீதம் கட்டணம் செலுத்தித் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகிறார்கள். மேலும் விவரங்கள் வேண்டுவோர் 26668 என்ற தொலைபேசி எண்ணில் விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.

'நானும் ஒரு நகரத்தார்'...

தமிழண்ணல்

12. குடும்பக் கட்டமைப்பு

சென்ற இதழ்க் கட்டுரையை முடிக்கும்போது 'சீர்திருத்தம் படித்தது போதும். நாமும் நகரத்தாராகப் பிறந்த சிறப்பையே இனிச் சிந்திப்போம்' என்று எழுதியிருந்தேன். இக் கட்டுரைகளைப் படித்துவிட்டுப் பலர், சிந்திக்கத் தொடங்கியிருப்பது, அவர்கள் எழுதும் மடல்களிலிருந்து புலனாகிறது. கோனாபட்டு **எம். அருணாசலம்** எம். ஏ., திறமையுடையோர்க்கே அரசு வேலை வாய்ப்பளிக்க வேண்டும்; நகரத்தார் திருப்பணிகள், நன்கொடைகள் பெரிதும் நகரத்தார்க்கே சென்றடையவேண்டும் என்றெல்லாம் மிக வலியுறுத்தி எழுதியுள்ளார். அவரும் சக்திநகர் **சி. மு லட்சுமணன்** அவர்களும் நகரத்தார் குரலில் யான் எழுதிவரும் தொடரைத் 'தயங்காமல் தொடர வேண்டும்' என்று என்னை ஊக்கப்படுத்தியுள்ளனர். நகரத்தார் இளைஞர்கட்கு நற்கருத்துக்களைக் கோவையாக அச்சிட்டுத் தர நன்கொடை தருவதாகவும் வாக்களிக்கும் இவர், ''வெறுமனே எழுதிவந்தால் போதாது. கருத்தை உருவாக்கிச் சிந்தனையைத் தூண்டிச் செயற்படவைக்க வேண்டும்,'' எனத் தீட்டியுள்ளார். முழுநீளத் தாளில் ஐந்து பக்கக் கட்டுரையாக அமைந்த, இவர் மடல் நகரத்தார் சமூகத்தின்பால் இவர் கொண்டுள்ள மாறாத காதலை - பாசத்தை எடுத்துக் காட்டுகிறது. மிகப்பல துன்பப் படிகளைத் தாண்டி, வறுமைப் பிடியினின்றும் தப்பி, 'இன்று மனைவி வழியில் நல்ல முறையில் சக்தி சர்க்கரை ஆலையில் எழுத்தராகவும் இந்தியன் ஆயுள் காப்பீட்டுக் கழக முகவராகவும். செயற்பட்டுக் கணிசமான வசதியுடன்' வாழ்ந்து வருவதாக இல்ட்சுமணன் எழுதியுள்ளதைப் படித்த போது, நம் சமூக இளைஞர்களின் தனித்தனி முயற்சியே கண்முன்

நின்றது. இவரும் நம் சமூகம் மேன்மையுறுவதற்கான பல ஆலோசனைகளை இம் மடலில் மிகவிரிவாகத் தந்துள்ளார். என் கட்டுரைகளால் உந்தப்பட்டு, அவர் சிந்தனை மழையைக் கொட்டும்போது, அதில் நனைவது மகிழ்ச்சியாக இருக்கிறது. 'தாங்கள் எழுதிவருவது எனக்கு மிகவும் தெம்பு தருகிறது' என எழுதுமிவரால், எழுதும் எங்களுக்கும் ஊக்கம் பிறக்கிறது. 'என்ன தான் குறை உளது இப்போது' என்று ஆராய்ந்தால் நாம் தனித் தனியே முயற்சி உடையவர்களாக இருக்கிறோம்; கூட்டு முயற்சி தான் இல்லை. தனித்தனிக் குடும்பப் பொறுப்பை மட்டுமே உணர்கிறோம். சமூகப் பொறுப்பு, சமூக உணர்வு அறவே கிடையாது. இன்றைய நம் குறைபாடு இதுதான் !

பெண்களே தடையாக இருக்கின்றனர்

''சமூக முன்னேற்றத்திற்குப் பெரும்பாலான பெண்களே தடையாக இருக்கிறார்கள். பணம் சம்பாதிப்பதில் உள்ள கஷ்டம் அவர்களுக்குப் புரிவதில்லை. சீர்திருத்தக் கல்யாணங்களை, பெண்கள் மனம், எளிதில் ஏற்பதில்லை. மகன் கல்யாணத்தை ஆடவர் தாமாக நிச்சயம் செய்யமுடியாது. மனைவியினுடைய ஒப்புதல் வேண்டும். அவள் ஒப்புக்கொள்ளாவிட்டால், குடும்ப நிம்மதி கெட்டுவிடும். அதனால் செட்டியார்களும் 'ஆமாம்' என்று தலையாட்டவேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாகிறார்கள்'' என்று நாட்டரசன்கோட்டை திரு. A. PR. KN. PR. அவர்கள் சென்னை-103 லிருந்து எழுதுகிறார்கள்.


யான் எழுதிய 'திருந்தும் சமூகமா? திருந்தாத சமூகமா?' என்ற கட்டுரையைப் படித்ததன் மூலம் மனவேதனை அடைந்ததாகக் குறிப்பிடும் அவர்கள் நம் பெண்களைப் படிக்க வைப்பதால் இக் குறை தீரும் எனவும் இப்போது நிலைமை மாறி வருகிறது என்பது உண்மைதான் எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அவர் கருத்து முழு உண்மையன்று. செட்டியார்களும் உள்ளூற 'வாங்குவதில்' ஆசை உள்ளவர்களே. ஆனால் பெரும்பாலான ஆடவர்கள் உலக அனுபவத்தாலும் கல்வி அறிவாலும் திருந்தி வருகின்றனர்; பெண்கள் காலத் தாழ்வாகத் திருந்திக் கொண்டிருக்கின்றனர். இன்று பெரும்பாலான பெண்கள் கல்வி கற்று வருகின்றனர். நிச்சயமாக நாளைய சமுதாயம் தானே திருந்திவிடும்.


நகரத்தார் குடும்ப அமைப்பு

உலகிலேயே **குடும்பக்கட்டுக் கோப்பு** ஆசியாவின் தனிச் சிறப்பாகும். ஆசியாவில் இந்தியாவும் இந்தியாவில் தமிழகமும் தமிழகத்தில் நகரத்தார் சமூகமும் இக் குடும்பக் கட்டமைப்பில் ஒன்றை ஒன்று விஞ்சியவை என்றால் மிகை ஆகாது. **மனைவி, இல்லாள்** எனத் தமிழ்ச் சொற்கள் கூட, வீட்டுக்குரியவளின் மேலாண்மையுரிமையைப் பறைசாற்றுகின்றன. அவன் மனைவனாக, இல்லானாக (!) ஆதல் இல்லை. இல்லத்திற்கு அரசி அவளே.

நகரத்தார் குடும்பத்தில் மக்கள் எல்லாம் ஆத்தா பக்கம்தான்! ஒரு பொருளை வெளிநாட்டிலிருந்து தந்தை கொண்டுவந்தாலும், அதைப் பகிர்ந்து கொடுப்பது ஆத்தாதான். வீட்டில் ஆச்சி தான் 'மக்களால்' தேர்ந்தெடுக்கப் பெற்ற முதலமைச்சர்! 'அவர்' சும்மா 'ஆளுநர்' உத்தியோகம் -தான்! முடிவுகள் எடுக்கப்படுவது ஆத்தா, மக்கள் கூடும் அமைச்சரவையில்; இறுதி ஒப்புதலுக்கு -ஒப்புக்காக அவரிடம் வரும். அவர் 'ஆமாம்' என்று ஒப்புவதைத் தவிர வேறு வழியில்லை. இருந்தாலும் செட்டியவீட்டு ஆச்சி அவரைக்' கேட்டு, 'ஆமாம்',



நெற்குப்பை தி. கனகசபை செட்டியார் அவர்கள் பேத்தியும் வலையபட்டி அரு. முத்துராமன் செட்டியார் அவர்கள் புதல்வியுமான செல்வி வள்ளிக்கண்ணுவுக்கும் குருவிக்கொண்டான்பட்டி எஸ். வி. எஸ். எம். சிவராமன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சிதம்பரம் M. Sc க்கும் வலையபட்டியில் 3-9-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



மேற்படி திருமணவிழாவில் (இடமிருந்து வலமாக) 'இலக்கியச் சிந்தனை' திரு. ப. லெட்சுமணம், திரு. ஆர்எம். முத்தழகப்ப செட்டியார், 'அறநெறி அண்ணல்' திரு. லெ. நாராயணன் செட்டியார், நமது இதழின் ஆசிரியர் 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், திரு. தி. கனகசபை செட்டியார் ஆகியோர்.

போட்ட பிறகுதான் அதை நிறைவேற்றுவார். ''என்ன சொல்றீங்க? என்ன சொல்றீங்க?'' என்று போட்டுத் துளைத்து, 'சரி. வேலைக்காரனை வீட்டுக்குப் போகச்சொல்' என்று அவரும் 'சம்மதம்' தெரிவித்த பிறகே, வேலைக்காரன் விலக்கிவிடப் படுவான். எந்த நடைமுறையிலும் அவர் ''இரு, ஆச்சியைக் கலந்து சொல்கிறேன்'' என்பார். குடும்பப் பொறுப்புகளில் ஒன்று ஆச்சியின் முடிவுக்கே அவர் விட்டுவிடுவார்; அல்லது ஆச்சியுடன் கலந்துபேசி முடிவு செய்வார். ஆச்சியும் அவ்வாறே தான். தன் அனுபவப்படியும் குடும்ப நலன் கருதியும் தீர்க்கமாகச் சிந்தித்து ஒரு முடிவு செய்வார். அவ்வாறு முடிவு செய்தாலும், கணவனுக்குத் தெரிவித்து அவர் 'ஆமாம்' என்று ஒப்புதலளித்தபிறகுதான், சரி என்று தலையசைத்த பிறகுதான் அதைச் செயற்படுத்துவார். 'அவுகளுக்கு'-த் தெரியாமல் ஆச்சி எதையும் செய்வதில்லை. எப்படியாவது 'அவுகளை'த் தலையசைக்க வைத்து விடுகிறார் என்பது தான் பரிதாபம்!

நம் குடும்பச் சூழலில் ஆச்சிகள் தங்களின் மேலாண்மையை எப்படியெல்லாம் வெளிப்படுத்துகிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால் நீங்கள் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்! முதலில் தன் கணவரைப் பற்றிப் பிறத்தியாரிடம் அவர் சுட்டிக் கூறும் முறையைப் பார்ப்போம்!

(வளரும்)

பகிர்ந்து கொள்ளும் மகிழ்ச்சி இருமடங்காகும். பகிர்ந்து கொள்ளும் துன்பம் பாதியாகக் குறையும்

— வெற்றிச் சிந்தனை

உ

ஸ்ரீ கற்பக விநாயகர் சகாயம் ஓம் ஸ்ரீ ஐயப்பன் துணை

SUBAM TRAVEL AGENCY

சுபம்

டிராவல் ஏஜென்ஸி

226, நாயக்கர் புதுத்தெரு, மதுரை-1. ☎ 22712

சபரிமலைப் பயணம்

3 நாட்கள் பிரயாணம்:- மதுரை-குற்றாலம்-ஆரியங்காவு-பந்தளம் -ஆரன்முலா-எருமேலி (தங்கல்) - பம்பை-சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை-மதுரை.

9-12-90 To 11-12-90; 12-12-90 To 14-12-90
15-12-90 To 17-12-90; 18-12-90 To 20-12-90
21-12-90 To 23-12-90; 24-12-90 To 26-12-90
1-1-91 To 3-1-91; 5-1-91 To 7-1-91
17-1-91 To 19 1-91

மேற்கண்ட 3 நாட்கள் பயணத்திற்கு பஸ் கட்டணம், தங்கும் வசதி, காலை டிபன் காபி, பகல் சாப்பாடு, மாலை ஸ்வீட், காரம், காபி, இரவு ஆகாரம் உள்பட நபர் 1க்கு ரூ. 270/-

அரைக் கட்டணம் 3வயது முதல் 8 வயதிற்குள் ரூ. 215/-

---

4 நாட்கள் பிரயாணம்: மதுரை - பழனி or திருமூர்த்திமலை - குருவாயூர் (தங்கல்) - திருப்பரையாறு - கொடுங்களூர் - காலடி - சோட்டாணிக்கரை - வைக்கம் - ஏட்டுமானூர் - எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

18-12-90 To 21-12-90; 31-12-90 To 3-1-91;
5-1-91 To 8-1-91

மேற்கண்ட 4 நாள் பிரயாணத்திற்கு பஸ் கட்டணம் 4 வேளை ஆகாரம் தங்கும் வசதியுள்பட நபர் 1க்கு ரூ. 350/-

அரைக் கட்டணம் 3 To 8 வயதிற்குள் ரூ. 280/-

---

4 நாட்கள் பிரயாணம்: மதுரை - குற்றாலம் - ஆரியங்காவு - ஒச்சிரை (மஹாதேவர்) - ஹரிப்பாடு (சுப்பிரமணியர்) - அம்பலப்புழை (கண்ணன்) (தங்கல்) - திருவல்லா (விஷ்ணு) - திருவண்வண்டூர் (கோசாலகிருஷ்ணர்) - செங்கன்னூர் - ஆரன்முலா - எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

23—12—90 To 26—12—90

நாள் 4க்கு பஸ் கட்டணம் சாப்பாடு உள்பட நபர் 1க்கு ரூ. 350/-

அரைக் கட்டணம் ரூ. 280/-

4 நாட்கள் பிரயாணம்: மதுரை - திருச்செந்தூர் - கன்னியாகுமரி - சுசீந்திரம் - திருவனந்தபுரம் (தங்கல்) - வர்க்கலா - பந்தளம் - ஆரன்முலா - எருமேலி - (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

23—12—90 To 26—12—90 & 5—1—91 To 8—1—91

நாள் 4க்கு பஸ் கட்டணம் சாப்பாடு தங்கும் சிலவு உள்பட நபர் 1க்கு ரூ. 350/-

அரைக் கட்டணம் ரூ. 280/-

---

6 நாட்கள் ஸ்ரீ மூகாம்பிகை – ஐயப்பன் தெரிசனம்

29—12—90 To 3—1—91

மதுரை - பன்னூரி - மைசூர் - சுப்பிரமண்யா - உடுப்பி - மூகாம்பிகை - குருவாயூர் - திருபபரையாறு - கொடுங்களூர் - காலடி - சோட்டாணிக்கரை - எருமேலி - பம்பை - சன்னிதானம் - செங்கோட்-டை - மதுரை.

நாள் 6க்கு பஸ் கட்டணம், சாப்பாடு, தங்கும் சிலவு உள்பட நபர் 1க்கு ரூ. 530/-

அரைக் கட்டணம் ரூ. 420/-

---

4 நாட்கள் பெரிய பாதைப் பயணம்

5—1—91 To 8—1—91

மதுரை - குற்றாலம் - ஆரியங்காவு - எருமேலி - பெரிய பாதையில் கரிவலம்தோடு (தங்கல்) – பம்பை - சன்னிதானம் (தங்கல்) – செங்கோட்டை - மதுரை.

நாள் 4க்கு பஸ் கட்டணம் சாப்பாடு உள்பட நபர் 1க்கு ரூ. 350/-

அரைக் கட்டணம் ரூ. 280/-

---

6 நாட்கள் மகரஜோதி - பெரிய பாதைப் பயணம்

11—1—91 To 16—1—91

மதுரை - திருமூர்த்திமலை - குருவாயூர் (தங்கல்) - திருப்பரையாறு - கொடுங்களூர் - காலடி - சோட்டாணிக்கரை - வைக்கம் - ஏட்டுமானூர் - எருமேலி (தங்கல்) - பெருவழிப் பரதையில் முக்குழி (தங்கல்) - பம்பை அடைந்து ஜோதி பார்த்தல் (தங்கல்) - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

நாள் 6க்கு பஸ் கட்டணம், 4 வேளை ஆகாரம், தங்கும் வசதி உள்பட நபர் 1க்கு ரூ. 540/-

அரைக் கட்டணம் ரூ. 430/-

---

2 நாட்கள் சபரிமலைப் பயணம்

9—1—91 To 10—1—91

மதுரை - குமுளி - எருமேலி - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

நாள் 2க்கு பஸ் கட்டணம், 4வேளை ஆகாரம் உள்பட நபர் 1க்கு ரூ. 190/-

அரைக் கட்டணம் ரூ. 150/-

குறிப்பு:

நபர் 1க்கு ரூ. 100/- வீதம் அட்வான்ஸ் அனுப்பிப் (பெயர், வயது, விலாசத்துடன்) பதிவு செய்ய வேண்டுகிறோம்,

உங்கள் குரல்

முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள் கூறுவது முற்றிலும் உண்மை. வேலையில்லாத் திண்டாட்டம் தீர அவர் கூறியுள்ள கருத்தை நாம் ஏற்றுக் கொண்டு செயற்படுத்த வேண்டும்.

முனைவர் தமிழண்ணல் அவர்கள் எழுதியுள்ளபடி திருமணங்களில் சாமான் பரப்பாமல் விளம்பரப்படுத்தாமல் இருந்தால் ஓரளவு பயன் கிடைக்கும்.

ராம. மா. சோலை
சீதாலெட்சுமி
பள்ளத்தூர்

நவம்'90 இதழின் கட்டுரைகளும், நேர்முகக் கட்டுரையும் வெகு அருமை. அச்சும் அமைப்பும் அதைவிட அருமையாக இருக்கின்றன.

ஆர்எம். கண்ணப்பன்
மதுரை

நல்லாசிரியர் விருது பெற்ற திருமதி வள்ளியம்மை ஆச்சி அவர்கள் கண்டிப்பும் கடமையுணர்வும் மிக்கவர்கள். அவர்களால் அவர்கள் பணியாற்றி வரும் பள்ளி மட்டுமல்ல எங்கள் ஊரே பெருமையடைகிறது.

திரு. ஆவுடையப்பன் போன்ற திறமைசாலிகளைத் தொடர்ந்து எங்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்.

அலமேலு ராமசாமி
கோட்டையூர்

நவம்பர்'90 இதழில் நகரத்தார் மத்தியில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டம், திருமணங்களில் தலைவிரித்தாடும் வரதட்சணை, முறைதலை போன்றவைகளை எவ்வாறு போக்கலாம் என்பதற்கு முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் வரவேற்கப்பட வேண்டியவை.

ராம. நாச்சியப்பன்
நாகபட்டினம்

சுதந்திரப் போராட்ட காலத்தில் வாழ்ந்தவர்களின் அருமை பெருமைகளை முனைவர் ஆறு. அழகப்பன் அவர்களின் நேர்முகக் கட்டுரை மிக அழகாக எடுத்துரைக்கிறது. நகரத்தாரின் பெருமைகளை விளக்கியிருப்பதும் பாராட்டுக்குரியது.

கனகு சுப்பு
கல்யாணம்
நன்னிலம்

மணியே மன்னிப்பாயே செய்தித் துணுக்கும் குறளும் குடி பற்றிய குறளும் ரசிக்கும்படி இருந்தன. நகரத்தார் இதழ்களிலேயே தரமான, சிறப்பான இதழாகத் திகழும் ''குரல்'' நம்சமூகத்திற்கு இன்று போல் என்றும் பயனுள்ள சேவை புரிய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வி. மணிகண்டன்
வேலூர்

நவம்பர் ''நகரத்தார் குரல்'' இதழ் உள்ளத்தைத் தொட்டது; உணர்ச்சியைத் தூண்டி விட்டது. காரணம் முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள் நாம் யார்? நாம் என்ன செய்துள்ளோம்? நம்மை வைத்து வளர்ந்தவர்கள் யார் என்பதையெல்லாம் அற்புதமாக எடுத்துக் கூறி நாம் இன்னும் முன்னேற வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கிறார்கள். தொடர்ந்து அவர்களது கட்டுரைகளை வெளியிட்டு உதவுங்கள்.

'ப்ளோரா' பழனிக்குமார்
கண்டவராயன்பட்டி



11. ஆங்கில மொழி மோகம்

அன்புள்ள ஆச்சிக்கு,

நர்சரிப் பள்ளி ஆசிரியர், பள்ளியில்தான் பிள்ளை, பிறருடன் ஆங்கிலத்தில் மட்டுமே பேசவேண்டும் என்று வைத்திருப்பது மாத்திரம் அல்ல. பிள்ளை ஆங்கிலச் சூழ்நிலையிலேயே இருக்க வேண்டுமாம். அதற்காகப் பெற்றோரும் பிள்ளையுடன் ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும் என்று யோசனையும் சொல்கிறார்.

அண்மையில் ஒரு சிறுவனின் தாயார் என்னிடம், 'அவனுக்கு மணி ஒன்பது ஆகிறது என்று சொன்னால் புரியவில்லை.' ''அது என்ன நம்பர் அம்மா, இங்கிலீஷில் சொல்'' என்று கேட்கிறான் எனப் பெருமையுடன் கூறினார். தமிழ் தாய்மொழி என்று எவன் சொன்னவன்? இந்தச் சிறுவனுக்குத் தமிழ், புரியாத மொழியாகிவிட்டது.

நடுத்தரக் குடும்பங்கள், உயர் தரக் குடும்பங்கள் - பலவற்றில் இன்றைக்குக் காணும் காட்சி இதுதான். நர்சரிப் பள்ளியில் பிள்ளையைச் சேர்க்க ரூ. 3000, ரூ. 5000, என்று நன்கொடை கொடுத்து, அதற்குத் தாய்மொழியையே அன்னிய மொழியாக்கும் திருப்பணியை மிக்க மகிழ்ச்சியோடு செய்து வருகிறோம். இந்த நிலை நீடித்தால், அடுத்து இரண்டு தலைமுறை கடந்தபின், தமிழும் செத்த

மொழியாகத்தான் இருக்கும்.

பள்ளியில் தமிழ் கற்பித்தாலே மாணவர்கள் உயிர்மெய் எழுத்துக்களை எழுதுவதில் தவறு செய்வார்கள். இப்பொழுதோ பல நர்சரிப் பள்ளிகளிலும், சென்ட்ரல் பள்ளி, பப்ளிக் பள்ளி முதலியவற்றிலும் தமிழ் கற்பிக்கப்படுவதே இல்லை. இவற்றில் படித்துக் கல்லூரிக் கல்வியையும் முடித்துப் பட்டம் பெற்ற மாணவனை, 'நெடு நல் வாடை' என்று எழுதச் சொன்னால், 'நெடு நாள் வடை' என்றுதான் எழுதுவான்.

அண்மையில் திருவனந்தபுரம் சென்றிருந்தேன் பஸ், எதிலும் இடப்பெயர் ஆங்கிலத்தில் இல்லை என்பது மட்டும் அல்ல. பெயர்கள் திருத்தமாகவும் இருந்தன. அண்மைக்காலம் வரை, 'TRIVAN DRUM' 'ALAPPEY' என்று ஆங்கிலேயரால் மாற்றப்பட்டு, மற்றவர்களாலும் அப்படியே வழங்கப்பட்டு வந்த பெயர்களை, 'திருவனந்தபுரம்,' 'ஆலப்புழை' என்று அசல் மலையாள வடிவத்திலேயே எழுத வேண்டும்; பஸ்ஸிலும் செய்தித்தாளிலும் அவ்வாறே எழுத வேண்டும் என்று அரசு சட்டம் கொண்டுவந்திருக்கின்றது. நாம் இன்னும் TRIPLICANE - ஐயும் WANDIVASH - ஐயும் விடவில்லை. மம்மி, டேடி என்ற மழலையைக் கேட்டுப் பூரித்துப் போகிறோம்.

பக்கத்தில் கர்நாடகம், தெலுங்கு முதலிய மாநிலங்களில் எல்லாம் மாநில மொழியைக் கட்டாயப் பாடமாக வைத்திருக்கிறார்கள். மற்ற மாநிலக் காரரும் அங்கு, மாநில மொழியைப் படித்தேயாக வேண்டும். நாம் தான் தமிழ் மொழி இல்லாமலே கல்வியை ஆங்கில மயமாக்கி வரு

கிறோம். இதற்கு ஒரு காரணம் கூறுகின்றார்கள். அனைத்து இந்திய அரசுப் பணிகளுக்கான தேர்வுகளை எழுதுவதற்கும், தேர்ச்சி பெறுவதற்கும் தமிழ் வழியே கல்வி கற்கும் மாணவர்களால் இயலவில்லை. ஆதலால் நர்சரிப் பள்ளி முதலாகவே ஆங்கிலத்தில் கல்வி இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

இவர்கள் முதலில் ஓர் உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். அரசுப் பணித் தேர்வுகளை மாநில மொழியிலும் எழுதலாம். மற்ற மாநிலங்களில் அந்தந்த மாநில மொழியில் நிறையப்பேர் எழுதித் தேர்ச்சியும் வேலையும் பெற்று வருகிறார்கள். அவர்கள் ஆங்கிலம் வழியாகக் கல்வி கற்கவில்லை. ஆங்கிலத்தை பல பாடங்களில் ஒன்றாகக் கற்கிறார்கள். தேர்வில் வெற்றிபெற வேண்டுமானால், பாடங்களை நன்றாகப் புரிந்து நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். ஆங்கிலத்தை நன்றாக எழுதினால் மட்டும் போதாது. தாய் மொழியில் படித்தால்தான் பாடங்கள் நன்கு புரியும். சிந்திக்க வாய்ப்பு இருக்கும்.

ஆங்கிலமே வேண்டாம் என்று சொல்லவரவில்லை. அதை நன்றாகக் கற்க வேண்டும். ஆறு மாதங்களில் ஒரு புதுமொழியைக் கற்பிப்பதற்கு மொழியறிஞர்கள் வழிகண்டுவிட்ட இந்நாளில் கல்விக்காலம் முழுதும் ஆங்கிலத்தைப் படித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

இன்றைக்கு ஆங்கிலப் பள்ளிகளில் மாணவர்கள் சீருடை அணிவதால், அவர்களுக்கு நடத்தைக் கட்டுப்பாடு வைத்திருப்பதால், பெற்றோர்கள் இப்பள்ளிகளில் தமது பிள்ளைகள் படிப்பதை விரும்புகிறார்கள். மாணவர்கள் சீருடை அணியட்டும். ஆனால் 'டையும்' ஷூவும் தான் சீருடையா? அவை நம்நாட்டு வெப்பநிலைக்கு ஏற்றவை அல்ல. பள்ளிக்குப் பிள்ளையை அனுப்பும் அவசரத்தில் ஷூவினுள் என்ன இருக்கிறது என்று பாராமலே பிஞ்சுக் கால்களில் மாட்டிக் கயிறு கட்டி அனுப்பி விடுகின்றனர். இது கேட்டை உண்டாக்காதா? திறந்த காலணியும் 'டை' இல்லாத சட்டையும் கால் சட்டையும் அணிந்தால் போதுமே!

அன்புள்ள

மணிவண்ணன்

வாடிக்கையாளர் விழா

நாகார்ஜுனா ஃபைனான்ஸ் லிட். நிறுவனத்தின் வாடிக்கையாளர் விழா மதுரை, தமிழ்நாடு ஓட்டலில் 10-10-90 அன்று காலை சிறப்பாக நடைபெற்றது. நமது இதழின் ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார்கள்.

அந்நிறுவனத்தின் ஆலோசகர் திரு. கண. சிற்சபேசன் வரவேற்றுப் பேசினார். திரு. வி. என். சிடி., திரு. டி. எம். ஜம்புலிங்கம் திரு. வி. பி. ஆர். கங்காராம் துரைராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கிப் பேசினர். கூட்டத்தில் பங்குதாரர், பண முதலீட்டாளர், கடன் பெறுவோரின் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப் பெற்றன.

அந்நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. எம். ஆர். ஸ்ரீதரனும் கலந்து கொண்டார். மதுரைக் கிளை மேலாளர் திரு. பி. சூரியநாராயணன் நன்றி கூறினார்.

வாழ்க்கையை நேசிப்பவர்களாக இருந்தால் நேரத்தை வீணாக்காதீர்கள். ஏனென்றால் வாழ்க்கை நேரத்தால் ஆனது.

— வெற்றிச் சிந்தனை

91/1


நகரத்தார் திருமண முறைகள், சீர்வரிசைகள் நமக்குத் தடை!

முனைவர் ஆறு. அழகப்பன் கூறுகிறார்.

(சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழியல் துறைத் தலைவர் 'கலைமாமணி' முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள் நமது இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டியின் முதற் பகுதியைச் சென்ற இதழில் வெளியிட்டிருந்தோம். அதன் எஞ்சிய பகுதியை இந்த இதழில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.)

''நகரத்தார்களைப் பிற்பட்ட இனத்தில் சேர்க்க என்ன முயற்சி செய்ய வேண்டும்?''

''மதுரையில் நகரத்தார் இளைஞர்கள் நம்மினத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டி உண்ணாவிரதம் இருந்தார்கள். இது ஓர் நல்ல அறிகுறி, இப்பகுதியில் நகரத்தார்களைப் பற்றி நன்கறிந்த அரசியல்வாதிகளும் நிபுணர் குழுவும்தான், தக்க பரிந்துரையை ஆட்சியாளர்களிடம் தெரிவிக்க வேண்டும். ஆனால் எப்பொழுதும் ஆட்சியாளர்கள் ஐந்தாறு நகரத்தார் செல்வர்களுடன் நட்புக் கொண்டே வருவதால் அவர்களைப் போலத்தான் மற்ற நகரத்தார்களும் இருப்பார்கள் என்று முடிவான கருத்தில் இருக்கின்றனர்.



இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வெங்கட்ராமன் அவர்களுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறைத் தலைவர் 'கலைமாமணி' முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள்.

மேலும் நகரத்தார்கள் தற்போது நடத்திவரும் திருமண முறைகளும சீர்வரிசைகளும் இதற்குத் தடையாக இருந்து வருகின்றன. ஒரு பர்லாங் அளவிற்குச் சாமான்களைப் பரப்புதலும், அதிசயிக்கத்தக்க கழுத்தூறு, தேவையற்ற பயன்படாத, விநோதமான வெள்ளிச் சாமான் கள் போன்றவையும் அரசின் சலுகைகளைக் கெடுத்து வருகின்றன. தொண்ணூற்று மூன்று விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றும் தொழிற் கல்வியில் இடம் கிடைக்காத நகரத்தார் மாணவர்கள் இந்திய அளவில் விளம்பரப்படுத்தும் பல்வேறு பணிகளுக்குப் போட்டிபோட முடியாமை நீடித்து வருகின்றது. உண்மையான புள்ளி விவரத்தைக் கொடுத்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போட்டால்கூட வரவேற்கத்தக்கது. மண்டலக் கமிஷன் அறியாத குலமாகவே இக்குலம் இருக்காமல் எழுச்சிமிக்க ஒரு பேரணியை - இளைஞர் பேரணியைத் திரு. வி. என். சிதம்பரம் அவர்கள் காரைக்குடியில் 1981ல் கூட்டியதுபோல மற்று மொரு பேரணியைச் சென்னையில் கூட்டி மக்களுக்கும் அரசினர்க்கும் உணர்த்த வேண்டும். வெற்றி அடைய இதன் தொடர்பாக நிரந்தரக் குழு ஒன்று அமைக்கவும் வேண்டும்.''

நகரத்தார் வரலாற்று நூல்கள்

''நகரத்தார் வரலாற்று நூல்கள் பற்றி தங்கள் கருத்து என்ன?''

''சர்மா, பண்டிதமணி, இராமனாதன் செட்டியார், சோமலெ, டாக்டர் சந்திரசேகர் போன்றவர்கள் நகரத்தார் வரலாற்றை எழுதியுள்ளனர். ஒருமுறை அரசர் முத்தையவேள் அவர்கள், கவிஞர் கண்ணதாசன் அவர்களை நகரத்தார் வரலாற்றைக் காவிய மாகப் பாடவேண்டும். என்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் கவியரசு அவர்கள் ஏசு காவியத்தைப் பாடும் சூழலுக்கு ஆளானார்கள். பொள்ளாச்சி தமிழறிஞர் என். மகாலிங்கம் அவர்கள் நல்ல தமிழ் நூல் களை உருவாக்க நினைக்கின்றபோது அந்நூலை எழுதத்தக்க புலவர்களைத் தேர்ந்தெடுத்துத் தக்க இடத்தில் இருக்கச்செய்து சில நூல்களை உருவாக்கியுள்ளார்கள். அவ்வை துரைசாமி அவர்கள் திருவருட்பாவிற்கு உரை எழுதியது இவ்வகையிலேயே எனலாம். இப்பொழுது கூடக் காலங் கடந்துவிடவில்லை. அனைவருடைய இல் லத்திலும் இருக்கக்கூடிய வகையில் ஒரு நகரத்தார் வரலாற்று நூலை ஆர்வமும் முயற்சியும் உடையவர்கள் உருவாக்கலாம்; உருவாக்க வேண்டும்.''

நகரத்தார் தர்மச் சொத்துக்கள்

''அக்கரைச் சீமைகளிலுள்ள நகரத்தார் தர்மச் சொத்துக்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''


''பர்மா, இலங்கை, செய்கோன் முதலிய நாடுகளில் உள்ள தர்மச் சொத்துக்களைப் பராமரிப்பவர்கள் மிக அருகி வருகிறார்கள். கோடிக்கணக்கான மதிப்புள்ள சொத்துக்கள் கோவில்களிலும், சத்திரங் களிலும் குவிந்து கிடக்கின்றன. அங்குள்ள ஒருசில நகரத்தார்களுக்கு அச்சொத்துக்கள் தற்காலிகத் தேவைகளை நிறைவு செய்தாலும் அவர்களுக்குப் பின் நகராட்சிச் சொத்துக்கள் போல மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சென்னையிலுள்ள நகரத்தார் ஐக்கிய சங்கத்தில் ஒருகுழு அமைத்து அந்நாடுகளுக்கு நேரில் சென்று ஆட்சி செய்வோரிடம் கலந்து பேசி நமக்குப் பயன்படும்வகையில் திட்டமிட மிடலாம். மலேயா, சிங்கப்பூர், போன்ற நாடுகளில் உள்ள சொத்துக்

கள் ஒருவகையில் உதவிவருகின்றன. எண்ணற்ற திருமணம், கல்வி, தமிழ்ச் சங்கம், குடமுழுக்கு விழாக்கள் போன்றவைகளுக்கு அவை உதவி செய்து வருகின்றன. இத்தகைய பணிகளுக்கு ஏனைய நாடுகளிலுள்ள தர்மச் சொத்துக்களும் பயன்பட வேண்டும். முயசித்தால் எதுவும் முடியாததில்லை.''

நகரத்தார்களில் இனமானத் தலைவர்கள்

''நகரத்தார்களில் இனமானத் தலைவர்களாக நீங்கள் கருதுகின்றவர்கள் யார்? யார்?''

''கால் நூற்றாண்டைக் கடந்த நகரத்தார் கன்னிகள் கிறித்தவ மதத்திலும், வேளாளர் குலத்திலும் திருமணம் செய்து கொண்டதைக் கண்டிக்கின்றோம். மேலும் நகரத்தார்களுக்குக் கூடுதற்சிறப்பு இல்லாவிட்டாலும், இருக்கும் பெருமையையாவது கட்டிக் காக்க வேண்டும். வன்னியர் குலத்திற்கு டாக்டர் திரு. இராமதாசு, பிராமண குலத்திற்கு திரு. இராமன், நாயுடு குலத்திற்கு திரு. கெங்குசாமி நாயுடு போன்றவர்கள் இருப்பது போல நம்மினத்திற்கு ஒரு புது இனமானத் தலைவர் தேவையே. ஒரு கட்டத்தில் திரு. வி. என். சிதம்பரம் அவர்கள் முன் வந்தார்கள். பிறகு அப்பொறுப்பினை ஏற்க முன்வராத கட்டமும் தோன்றியது. மக்களோடும் அரசியலோடும் தொடர்புடைய ஒருவர் தலைவராக வருவது நகரத்தார்களுக்கு ஒரு விடிவு காலமாகும்.''



நாட்டரசன்கோட்டை திரு. நா. லெட்சுமணன் B.E (Executive Engineer (General) T N. E. B, Virudhunagar) யின் புதல்வி செல்வி உமா B.A. க்கும் காரையார்மங்கலம் திரு. நா. சித. ராம. சிதம்பரம் செட்டியார் புதல்வன் செல்வன் அருணாசலம் என்ற ராமநாதன் B.Com. க்கும் நாட்டரசன்கோட்டையில் 2-11-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

நகரத்தார்களுக்குச் செய்தி

''நகரத்தார்களுக்கு நீங்கள் சொல்லும் செய்தி என்ன?''.

''முன்னோர் செய்த தர்மங்களும் பாடுவார் முத்தப்பச் செட்டியாரின் அறவாக்கும் இக்குலத்தைக் காத்து வருகின்றன. பிற சமூகத்தினரிடம் பொங்கிவரும் இனஉணர்வும் ஓங்கிவளரும் பண்பாட்டு உணர்வும் இன்றைய நகரத்தார்களுக்குத் தேவையானது. உலகத்தோடு ஒட்டி ஒழுகத் தங்களுக்குரிய மனப்பக்குவத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். எண்ணிக்கையில் அப்பொழுதுதான் சிறுபான்மையராக உள்ள நகரத்தார் சமூகம் ஒரு முன் உதாரணமாக இருக்க முடியும். வரலாற்று ஆசிரியர்களுக்கு இறந்த காலமாக இல்லாமல் நிகழ்காலமாகவும் எதிர்காலமாகவும் இருக்க வேண்டும். நகரத்தார் குலத்தின் குரல் அப்பொழுது தான் நாற்றிசையும் ஒலிக்கும்.

எத்தனை சீர்திருத்த மனப்பான்மை கொண்ட பெரியார்கள் நகரத்தார் இனத்தில் தோன்றினாலும் மணிமேகலையைப் போல மனப்புரட்சி கொண்ட பெண்கள் நகரத்தார் குலத்தில் தோன்றினால் தான் இக்குலம் என்றும் பாடுவார் முத்தப்பச் செட்டியார் வாக்கிற்கேற்ப வாழும். இல்லையெனில் அவ்வறக் கவிபாடிய பாடலே பொய்த்துப் போய்விடும்.''

(முற்றும்)

டெல்லி எருமை - ஆட்டுக்குட்டி - கோழிக்குஞ்சு

என் மனைவியிடத்திலே நான் சொல்வதுண்டு. ''இப்ப இருக்கிற தோதெல்லாம் பார்த்தா நான் ரொம்ப சீக்கிரம் கல்யாணம் பண்ணிக் கிட்டது தப்புனு தோனுது. யார் என்ன கேக்கிறதுன்னு விவஸ்தையே இல்லாமப் போச்சு. எல்லாரும் ஏகமா வாங்கருங்க. இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு நான் கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்கலாம். உங்க அப்பச்சியும் ஆத்தாவும் என்னைச் சல்லுசாப் புடிச்சுட்டாக. எல்லாமாச் சேர்த்து ஒரு இருபத்தோராயிரத்துக்குள்ளே முடிச்சுட்டிய.. ஒரு டெல்லி எருமை விலையே இருபத்தோராயிரம்தான். அதுக்குள்ள என் னைச் சல்லுசாப் புடிச்சுட்டிய'' ன்னு. என் மனைவி சொன்னு ''உங்க களுக்கு இதுவே அதிகம்'' னு. அப்படிக் காலங்கள் மாறிக் கொண்டிருக் கின்றன.

— லேனு தமிழ்வாணன்

திரு. லேனுவுக்காவது டெல்லி எருமை விலை கிடைத்தது. எனக்கு ஆட்டுக்குட்டி விலைகூடக் கிடைக்கவில்லை. ஏனென்றுல் திரு. லேனுவின் திருமணத்திற்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னுல் நான் விலை போனவன்.

— 'இலக்கியச் சிந்தனை'
ப. லெட்சுமணன்

திரு. லேனு, டெல்லி எருமை விலை போனதாகக் கூறினுர். திரு. ப. லெட்சுமணன் ஆட்டுக்குட்டி விலை போனதாகக் கூறினுர்கள். நான் 36 ஆண்டுகளுக்கு முன்னுல் ஒரு கோழிக்குஞ்சு விலை போயிருக்கிறேன்.

— காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன்

நகரத்தார் திருமணங்களில் 'திருப்பூட்டுதல்' மூன்று விதமாக நடைபெறுகிறது. மேலவட்டகை எனப்பெறும் வலையபட்டி, மேலைச் சிவபுரி, குழிபிறை ஆகிய பகுதிகளில் மாப்பிள்ளை மனையில் நிற்க மணமகள் கீழே நிற்க திருப்பூட்டப் பெறுகிறது. கீழ வட்டகை எனப் பெறும் காரைக்குடி, தேவகோட்டை, பள்ளத்தூர் ஆகிய பகுதிகளில் மணமகள் மனைமீது நிற்க மாப்பிள்ளை கீழே நிற்க திருப்பூட்டப் பெறு கிறது. தெற்கு வட்டகை எனப்பெறும் நாட்டரசன்கோட்டை, ஒக்கூர், அலவாக்கோட்டை ஆகிய பகுதிகளில் அறைக்குள் மாப்பிள்ளையும் மணமகளும் சரிசமமாக நின்று திருப்பூட்டப் பெறுகிறது. அறைக்குள் மணம் நடப்பதால் மணம் + அறை என்பதுவே 'மணவறை'யாய் வழங்கப் பெறுகிறதோ என எண்ணவும் தோன்றுகிறது.

— புலவர் மாமணி மா. முத்துராமன்

(அலவாக்கோட்டையில் 22-11-90 அன்று நிகழ்ந்த ''நகரத்தார் குரல்'' இதழின் துணை ஆசிரியர் திரு. எல். சுந்தரத்தின் புதல்வன் செல்வன் லெட்சுமணன் – செல்வி அலமேலுவின் திருமண வாழ்த் தரங்கில்.)


பொன்னமராவதி அழகப் பெருமாள் கோவில் குடநீராட்டு விழா

பொன்னமராவதி அருள்மிகு அழகப் பெருமாள் திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு 22-11-90 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றது. குடநீராட்டை சுமார் முப்பதாயிரம் பேர்கள் கண்டு களித்தார்கள். 21-11-90 அன்று இரவு முனைவர் அர. சிங்கார வடிவேலன் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. தாலாட்டுக் கவிஞர் திரு. T. குமரப்பன் வரவேற்புரை நிகழ்த்த முனைவர் திரு. சபா. அருணசலம் முனைவர் திரு. வ. தேனப்பன், திருமதி கண்ணம்மை அரங்கநாதன், திரு. சிவல்புரி சிங்காரம் ஆகிய கவிஞர்கள் கவியரங்கில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

22-11-90 அன்று குடநீராட்டு நடைபெற்றதும் கொப்பனபட்டி மு. ப. மு. ராம. சேதுராமன் செட்டியார் அவர்கள் தலைமையில் திரு. வி. என். சிதம்பரம் அவர்கள் குடநீராட்டு மலரை வெளியிட திரு. பிஎல். எஸ்எம். சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் மலரைப் பெற்றுக் கொண்டார்கள். புலவர் திரு. அண. மலையாண்டிச் செட்டியார், திரு. பி. ராமசாமி அம்பலம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்கள். ''திருமால் அவதாரம்'' பற்றி திருமதி சரசுவதி இராமநாதன் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

விழாவில் மலரை வெளியிட்டு திரு. வி. என். சிடி அவர்கள் பேசியதாவது:-

13ஆம் நூற்றுண்டில் பாண்டிய மன்னர்களுக்கும், சோழ மன்னர்களுக்கும் எல்லையாக பொன்னமராவதி இருந்து வந்தது. பாண்டிய மன்னனுடைய அரண்மனைகூட பொன்னமராவதியில் இருந்ததாக வரலாறு கூறுகிறது. முதலாம்



அண்மையில் குடநீராட்டு விழா நடைபெற்ற பொன்னமராவதி அழகப் பெருமாள் கோயிலின் விமானத் தோற்றம்.

சுந்தர பாண்டியனுல் கி.பி.1228ல் இந்த ஆலயம் கட்டப்பட்டு, பின்னர் புதுக்கோட்டை சமஸ்தான மன்னர்களால் இந்த ஆலயம் பாதுகாக்கப்பட்டு வந்தது. 20ஆம் நூற்ருண்டில் சரியான பராமரிப்பின்மையால் கோவில் சிறிது சிதைவுற்றிருந்தது. புதுப் பட்டியில் வாழ்ந்து வந்த ப. அ. அண்ணுமலேச் செட்டியார் அவர்கள் உள்ளத்தில் பெருமாள் தோன்றி சிதைவுற்ற இந்த ஆலயத்தைக் காணும்படி செய்திருக்கிருர். அதன் பிறகு அண்ணுமலேச் செட்டியார் அவர்கள் ஆலயத்தைச் சீர்திருத்தம் செய்து சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பாக குடநீராட்டுச் செய்து இருக்கிருர்கள். அண்ணுமலேச் செட்டியாருடைய பேரர்கள் பெருமாள் செட்டியாரும், இளேய பெருமாள் செட்டியாரும் பல இலட்சக் கணக்கான ரூபாய்களேச் செலவு செய்து இந்தக் குடநீராட்டை இன்று சீரும் சிறப்புமாக நடத்திக் கொண்டு இருக்கிருர்கள் இந்தக் குடநீராட்டுக்கு மருந்து சாத்துவதற்காக இக்கோவிலின் நாக விக்ரகத்தை நகர்த்திய போது அதன் அடியில் வைக்கப்பட்டிருந்த வெள்ளிக் காசு மூலம் பெருமாள் செட்டியார் அவர்களின் ஐயா அண்ணுமலேச் செட்டியார் அவர்கள் குடநீராட்டுச் செய்த விவரம் தெரிய வருகிறது. இப்போது குடநீராட்டுச் செய்துள்ள பெருமாள் செட்டியார், இளேய பெருமாள் செட்டியார் இருவரையும் கருவுலே திருவுடையார் என்று சொன்னுல் மிகையாகாது. அவர்கள் பிறந்தவுடன் மூத்தவருக்கு இராமனுதன் என்றும், இளேயவருக்கு அண்ணுமலே என்றும் அவர்களது பெற்ருேர்கள் பெயர் வைத்தனர். அந்த இரண்டு குழந்தைகள் பிறந்தவுடன் இருவரது நெற்றியிலும் பெருமாள் சின்னம் போன்று இருந்ததாம். அந்தச் சின்னத்தைக் கண்ட அவர்களது



ப. அ. அண்ணுமலேச் செட்டியார் அவர்களின் பேரன்கள் திரு. பெருமாள் செட்டியாரும், திரு. இளேய பெருமாள் செட்டியாரும்.

பெற்ருேர்கள் ஒரு பக்கம் வியப்பாகவும், ஒருபக்கம் பயமாகவும் இருந்து, வைணவப் பெரியவர்களிடம் கேட்க அவர்களில் ஒரு பெரியவர், ''மூத்த குழந்தைக்கு பெருமாள் என்றும், இளைய குழந்தைக்கு இளைய பெருமாள் என்றும் பெயரிட்டு அழையுங்கள். நாளடைவில் நெற்றியில் உள்ள கோடுகள் தானுகவே மறையும்'' என்று கூற அதேபோல் பெயரிட்டு அழைத்த போது கோடுகளும் மறைந்தன. அந்தக் குழந்தைகள் தான் இந்தக் குடநீராட்டைச் சீரும், சிறப்புமாக நடத்திக் கொண்டு இருக்கிருர்கள். அவர்கள் இருவரும் பெருமாளின் அருளைப் பெற்றவர்கள் என்று சொன்னல் மிகையாகாது.

இது எப்படி இருக்கிறது என்று கேட்டால், மலையத்துவச பாண்டியனுக்கு மகளாகப் பிறந்த மீனுட்சிக்கு இயற்கைக்கு மாருக மூன்று தனங்கள் இருந்தன. அதைக் கண்ட அரசன் அச்சமுற்ற போது, அவளுக்குரிய கணவனைப் பார்க்கும்போது மூன்ருவது தனம் மறையும் என்று அசரீரி கூறிற்று. அதேபோல் மதுரைக்கு அரசியான மீனுட்சி வில்வித்தை, வாள்வித்தை எல்லாவற்றிலும் தேர்சசி பெற்று, எல்லா அரசர்களையும் வென்று திக்விஜயம் புறப்பட்டு கைலயங்கிரிக்கு சென்று சிவபெருமானுடனேயே போருக்குச் சென்றபோது, சிவபெருமான் பார்வைபட்டு மூன்ருவது தனம் மறைகிறது. சிவபெருமானே மீனுட்சியிடம் நான் உன்னை மதுரைக்குவந்து மணந்து கொள்கிறேன் என்று சொல்கிருர். அது தான் மீனுட்சி கல்யாணம். எப்படி மீனுட்சி அம்மைக்கு இருந்த தனம் மறைந்ததோ அதே போல நமது பெருமாள் செட்டியார்கள் இருவருக்கும் பெருமாளுடைய சின்னம் தோன்றி மறைந்ததைப் பற்றி நினைக்கும்போது அவர்கள் என் கண்களுக்கு தெய்வக் குழந்தைகளாகவே தெரிகிருர்கள்.

பொதுவாகச் செட்டிய வீடுகளில் பெண் குழந்தைகள் தாய் வீட்டிலிருந்து வாங்கிக் கொண்டு தான் செல்வார்கள். அது தான் மரபும் கூட. ஆனுல் இங்கு பிறந்திருக்கும் பெண் குழந்தைகளோ தங்கள் செலவில் இந்த ஆலயத்திற்குக் கருட வாகனம் செய்து வைத்து ஆண்டிற்கு ஒரு முறை வைகுண்ட ஏகாதசி அன்று சுவாமி புறப்பாடும் செய்து வருவது சிறப்பிற்குரியதாகும். ப. அ. அண்ணமலைச் செட்டியாரின் சொத்திற்கு மட்டும் வாரிசாக இல்லாமல் அவர்களின் எண்ணத்திற்கும் வாரிசாக இருந்து தர்ம காரியங்கள் செய்து வருகிற பெருமாள் செட்டியார், இளைய பெருமாள் செட்டியார், இவர்கள் வீட்டில் பிறந்த பெண் மகவுகள் எல்லோரும் வாழ்க வளர்க என்று வாழ்த்துகிறேன்.

திருமணம்

குருவிக்கொண்டான்பட்டி கரு. க. கருப்பன் செட்டியார் என்கிற சேதுச் செட்டியார் அவர்கள் பேத்தியும் திரு. குமரப்பனின் புதல்வியுமான செல்வி வள்ளியம்மை என்கிற கற்பகம் B. Com. க்கும் பி. அழகாபுரி சித. நா. நாகப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் கருப்பையா என்கிற சிவா B. Com. க்கும் 22-11-90 அன்று குருவிக்கொண்டான்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பிச்சைக் குருக்களுக்கு புதிய பட்டம்

பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் கோவிலின் தலைமைச்சிவாச்சாரியார் டாக்டர் திரு. கே. பிச்சைக் குருக்களின் சிவாகமத் தொண்டினைப பாராட்டி அன்னாருக்கு 23-11-90 அன்று தேனி திரு. சச்சிதானந்த சுவாமிகள் தலைமையில் தமிழ்நாடு அருள் நெறித் திருக்கூட்டத்தினர் 'சிவ ஞானத்தந்தை' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கியுள்ளனர்.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ பட்டமங்கலம் சுயம்புலிங்கம் நயினுர் கோவிலில் 3-12-90. 10-12-90, 17-12-90 &24-12-90 ஆகிய திங்கட்கிழமைகளில் சோம வாரங்கள் கொண்டாடப் பட உள்ளன.

ஃ திருவீழிமிழலை அருகில் உள்ள மருதவஞ்சேரி மனு நாதேஸ்வரர் ஆலயத்தில் 'காசிஸ்ரீ' திரு. ஆர். வயிரவனுக்கு 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. தலைமையில் 31-8-90 அன்று பாராட்டு விழா நடைபெற்றது.

ஃ குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு 7-11-90 அன்று கீழச்சிவல்பட்டி ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் மேனிலைப் பள்ளியில் குழந்தைகளின் கலை நிகழ்ச்சி கொண்டாடப் பெற்றது.

ஃ டாக்டர் திரு. என். என். கண்ணப்பனின் பிறந்த தினத்தை யொட்டி 19-11-90 அன்று பார்வையற்ருேருக்காக பாலமுருகன் பாலி கிளினிக்கில் 188 ஆவது இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

ஃ சமுத்திராபட்டியில் அமைந்துள்ள அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோவில், அருள்மிகு பழநி ஆண்டவர் திருக்கோவில் ஆகிய வற்றிற்கு 6-12-90 (கார்த்திகை மீ 20 வ) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு மேல் 9 மணிக்குள் குட நீராட்டு நடைபெற உள்ளது.

ஃ வலையபட்டி யூனியன் கிளப்பின் வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் 26-11-90 & 27-11-90 இரண்டு தினங்களும் சிறப்பாக நடைபெற்றன.

ஃ சென்னை நகரத்தார் சங்கங்களின் கூட்டமைப்புக் குழுவின் ஆதரவில் சென்னை வடபழனி கல்யாண மண்டபத்தில் 29-11-90 அன்று மூன்று கூட்டுத் திருமணங்கள் சிறப்பாக நடைபெற்றன.

ஃ ஊனையூர் (கடியாபட்டி) ஸ்ரீ செந்தாமரைக் கண்ணன் பெருமாள் கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா 2-9-90 ஞாயிறன்று காலையில் சிறப்பாக நடைபெற்றது. இரவு சுவாமி புறப்பாடும் நடைபெற்றது.


பிள்ளையார்பட்டியில் கூட்டுத் திருமணம்

அடுத்த கூட்டுத் திருமணம் பிள்ளையார்பட்டியில் 3-2-1991 (பிரமோதூத ஆண்டு தைத் திங்கள் 21 ஆம் நாள்) ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும் என்றும் அது தொடர்பாக 31-12-1990 க்குள் வரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப் பெறுமென்றும் திருச்சி நகரத்தார் சங்கம் அறிவித்துள்ளது.

சரித்திரத்தை மாற்றிய கலைஞர்!

காரைக்குடித் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரும் திரைப்பட இயக்குனருமான திரு. இராம. நாராயணனின் புதல்வி செல்வி அன்பு மீனுளின் திருமணத்தை யொட்டி 11-11-90 அன்று மாலை காரைக்குடி கம்பன் மணி மண்டபத்தில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமை தாங்க அமைச்சர்கள் திரு. கே. என். நேரு, திரு. கோ. சி. மணி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. மு. தமிழ்க்குடிமகன் சட்டமன்ற உறுப்



திரு. இராம. நாராயணன்

பினர் திரு. எஸ். எஸ் தென்னரசு, திரு. பழ. கருப்பையா, திரு. சித. சிதம்பரம், டாக்டர் மெ. சுந்தரம், திரு. இராம. இராமநாதன் நமது இதழின் ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் மற்றும் பலர் மணமக்களை வாழ்த்திப் பேசினுர்கள்.

திரு. வி. என். சிதம்பரம் அவர்கள் பேசியபோது கூறியதாவது :-

எங்கள் திரு. இராம. நாராயணன் அன்பின் பிறப்பிடம்; பண்பின் உறைவிடம். அவருக்குக் கொடுக்கத் தெரியுமே தவிர, கேட்கத் தெரியாது. சட்டமன்றத் தேர்தலின்போது அவருடைய நண்பர் ஒருவருக்காக காரைக்குடித் தொகுதிக்குச் சிபாரிசு செய்யக் கலைஞரிடத்திலே சென்றபோது ''நீ ஒருவருக்கும் சிபாரிசு செய்ய வேண்டாம். நீயே அந்தத் தொகுதியில் நில்'' என்று கலைஞர் சொல்லிவிட்டார்கள். அதன் மூலம் கிடைத்த பரிசுதான் சட்டமன்ற உறுப்பினர் பதவி. திரு. இராம. நாராயணன் நான்கு வாரத்தில் படத்தை எடுத்து முடிப்பார். அது எட்டு வாரங்கள் ஓடித் தயாரிப்பாளருக்குப் பணத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும்.

தேர்தலுக்கு முன்பாக கலையுலகத்தைச் சேர்ந்தவர்கள் சர்வ கட்சியினரையும் அழைத்து திரைப் படத் தொழிலில் வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்குக் கலைஞரும் ''கடற்கரை வரை அழைத்துச் சென்றுவிட்டீர்கள். சற்றுத் தொலைவில்தான் கோட்டை இருக்கிறது. அங்கு அழைத்துச் சென்ருல் வரியைக் குறைக்கிறேன்'' என்ருர். மக்கள் அவ்வாறே கோட்டைக்கு அழைத்துச் சென்ருர்கள். அதன்பிறகு 52% ஆக இருந்த கேளிக்கை வரியை கலைஞர் 40% ஆகக் குறைத்தார். இந்தியத் துணைக் கண்டத்திலேயே போட்ட வரியைக் குறைத்ததாகச் சரித்திரம் கிடையாது. விஞ்ஞான வளர்ச்சியால் தொலைக்காட்சி, வீடியோ முதலியவற்ருல் பாதிக்கப் பட்டிருந்த திரைப்படத் தொழில் உயிர்பெற்று பல்லாயிரக் கணக்கான தொழில் நுட்பக் கலைஞர்களின் வாழ்வு மலர்ந்தது.

ஆண்டவனை வணங்குகிற போது 'அதைக் கொடு' 'இதைக் கொடு' என்று கேட்கக்கூடாது. நமக்கு எது தேவை என்பது ஆண்டவனுக்குத் தெரியும். அதேபோல

நம்மை ஆண்டு கொண்டிருப்பவர் களுக்கும் நமக்கு என்ன தேவை என்பதும் தெரியும். சிறுபான்மை யினரான நகரத்தார் சமூகத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பணக்காரர்களைத் தவிர பலர் வறுமையில் வாடிக் கொண்டிருக்கி றார்கள். எங்களைப் பிற்படுத்தப் பட்ட சமூகமாக அறிவித்து நகரத் தார்களையும் வாழவைக்க வேண்டு மென்று டாக்டர் கலைஞர் அவர் களைப் பணிவன்புடன் கேட்டுக் கொண்டு மணமக்களை ''வாழ்க வாழ்க'' என்று வாழ்த்தி அமைகி றேன்.

திருமணம்

ஆத்தன்குடி கா. அரு. கா. காடப்ப செட்டியார் அவர்கள் பேத்தியும் திரு. அருணசலத்தின் புதல்வியுமான செல்வி மீனாளுக்கும் காரைக்குடி திரு. சித. ராம. சித. மோகனின் புதல்வன் செல்வன் சிதம்பரத்திற்கும் 29-11-90 அன்று ஆத்தன்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வலையபட்டியில் தைப்பிங் அறப்பணிக் கழகம்

மலேசியா தைப்பிங் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் அறப் பணிக் கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக வலைய பட்டி நகரத்தார் விடுதியில் 19-11-90 அன்று பி. அளகாபுரி சி. நா. வெ. வெள்ளையப்ப செட்டி யார் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் மேற்படி அமைப்புக்கு வலையபட்டி சா. பழ. பழநியப்ப செட்டியார் அவர்கள் தலைவராகவும் பி. அளகாபுரி ராம. மு. சோம. முத்தப்ப செட்டியார் அவர்கள் துணைத் தலைவராகவும் வலையபட்டி பு. வ. ராம. வள்ளி யப்ப செட்டியார் அவர்கள் செய லாளராகவும் தேர்வு செய்யப் பெற்றனர். தைப்பிங்கில் ஏற்க னவே தொழில் செய்து தற்சமயம் இந்தியாவிலிருப்பவர்கள் எல்லோ ரும் மேற்படி அமைப்பில் உறுப் பினராகச் சேர்ந்து கொள்ள செய லாளர், தைப்பிங் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் அறப் பணிக் கழகம், கதவு எண் 35, 5ம் நம்பர் ரோடு, வலையபட்டி-622411 புதுக்கோட்டை மாவட்டம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப் பெறுகிறார் கள்.

காரைக்குடியில் இலவசக் கண் சிகிச்சை

பினங்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகத் தினர் காரைக்குடி ப. ராம. மண்டபத்தில் 9–11–90 அன்று இலவசக் கண் பரிசோதனை முகாம் நடத்தினர். இம்முகாமில் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் மாதவன் தலைமை யில் டாக்டர் உமா மகேஸ்வரி, இரண்டு பர்மிய டாக்டர்கள் மற் றும் இரண்டு இலங்கை டாக்டர் கள் சுமார் 250 நபர்களுக்கு கண் பரிசோதனை செய்தனர். 20 பேர் களுக்கு சிகிச்சை அளிக்கப் பெற் றது. பலருக்குக் கண்ணாடிகளும் மருந்துகளும் இலவசமாக வழங் கப் பெற்றன.

படைப்பு வீட்டில் திருமணத்திற்கு உதவத் தீர்மானம்

பள்ளத்தூர் அழகஞ்செட்டி யார் காளியார் பொதுப் படைப்பு பரிபாலன சபையின் செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்கள் மு. அ. அரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தலைமை யில் 24-11-90 அன்று அழ. ராம. சத்திரத்தில் நடைபெற்றது. படைப்பைச் சேர்ந்த ஏழூர் பங் காளிகளும் கலந்து கொண்டனர்.

படைப்பைச் சேர்ந்த பங்காளி களில் பொருளாதார வசதி குறைந்தவர்களின் பெண்கள் திருமணத்திற்கு திருமணம் ஒன் றிற்கு ரூ. 2500 வீதம் ஆண்டிற்கு 8 திருமணங்களுக்கு நன்கொடை வழங்குவது என்று தீர்மானிக்கப் பெற்றது.

திருமணம்

இராங்கியம் நா. அ. குமரப்ப செட்டியார் அவர்களின் பேத்தி யும் திரு. காசியின் புதல்வியுமான செல்வி வள்ளிக்கண்ணுவிற்கும் புதுப்பட்டி திரு. செ. அ. இராம சாமிச் செட்டியார் புதல்வன் செல் வன் அண்ணாமலைக்கும் 22-11-90 அன்று இராங்கியத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

உ
சிவமயம்

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
23-8-1929

மறைவு :
19-12-1987

நாட்டரசன்கோட்டை

வீர. ஆ. ராம. வெங்கடாசலம் செட்டியார்

(முன்னாள் அலுவலகக் கண்காணிப்பாளர்
சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை-22)

என்றும் எங்கள் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்று
நிலைத்து நிற்கும் இதய தெய்வத்திற்கு
அஞ்சலி செலுத்துகிறோம்.

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

ராம. வெ. சொர்ணவல்லி ஆச்சி - மனைவி

மகன்கள் :

வெ. இராமசாமி — கண்ணாத்தாள் இராமசாமி
வெ. கண்ணப்பன் — உமையாள் கண்ணப்பன்
வெ. முருகப்பன் — புவனேஸ்வரி முருகப்பன்
வெ. மாணிக்கவாசகம் — நாச்சம்மை மாணிக்கவாசகம்
வெ. சோமசுந்தரம் — மீனாட்சி சோமசுந்தரம்

மற்றும் பேரன் பேத்திகள்

''ஸ்ரீ வேங்கட இல்லம்''
2/195-B, பெருங்குடி.
மதுரை-625 022

மூவார் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம்

மலேசியாவில் மூவாரில் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பாக தெண்டாயுதபாணி சுவாமி ஆலயம் கட்டப்பட்டது. நகரத்தார் சங்கமும் தோன்றியது. மூவாரில் கடை வைத்திருப்பவர்கள் ஆண்டுதோறும் கார்த்திகை பூசை விழா வன்று மகமை எழுதி ஒவ்வொருவருக்கும் ஆண்டுதோறும் கிடைக்கும் இலாபத்தில் ஒரு சதவிகிதமும் என்ன சொத்துத் தேறுகிறதோ அந்த மதிப்பில் ஒரு சதவிகிதமும் கோவிலுக்கு வரியாக அளித்து வந்தார்கள். கார்த்திகை பூசையில் மஞ்சள் முதலிய மங்கலப் பொருட்களை ஏலம் விட்டு அந்த ஏலத்தையும் நகரத்தார்களே எடுத்து கோவிலுக்கு நிதி சேர்த்தார்கள். அந்த நிதியைக்கொண்டு கோவில் கட்டி தொடர்ந்து நகைகள், சொத்துக்கள் முதலியன வாங்கப்பட்டன. அதன் வருவாயில் இருந்து ஆலயம் நடத்தப்பட்டது. இப்படித்தான் மலேசியா சிங்கப்பூரில் உள்ள எல்லாக் கோவில்களும் கட்டப்பட்டன. 14 ஆண்டுகளுக்கு முன்பாக மூவார் கோவிலிலிருந்து பணத்தை இந்தியாவிற்கு அனுப்பி புதுக்கோட்டையில் அதற்கு ஒருசங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அங்கிருந்து வந்த பணத்-தை வங்கியில் முதலீடு செய்தும், வீடுகள் வாங்கியும் அதில் கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு நகரத்தார் மாணவ, மாணவிகளுக்குக் கல்வி உதவியும், திருமணத்திற்கு உதவியும் செய்து வருகிறார்கள். அண்மையில் அந்தச் சங்கத்தில் தேர்தல் நடந்தபோது, தலைவராக இராங்கியம் வி. என். சிதம்பரம் செட்டியார், துணைத் தலைவராக ராயவரம் ப. வ. அழ. வயி. அழகப்ப செட்டியார், செயலாளராக கடியாபட்டி பிஆர். குமரப்ப செட்டியார், பொருளாளராக விரையாச்சிலை மு. பழ. வெங்கடாஜலம் செட்டியார், செயற்குழு உறுப்பினர்களாக இராங்கியம் நா. வ. சித. சிதம்பரம் செட்டியார், கடியாபட்டி சித. மு. முத்துராமன் செட்டியார், விராமதி பெரி. பழ. அண்ணாமலை செட்டியார், அரிமளம் செ. பழ. பழனியப்ப செட்டியார், விரையாச்சிலை மு. பழ. பழனியப்ப செட்டியார், அ. மு. ராமனுதன் செட்டியார், நேமத்தான்பட்டி பழ. நா. திருநாவுக்கரசு செட்டியார், சா. ஈ. சிவ. நாராயணன் செட்டியார், இராயவரம் பவ. பழ. ராம. வயிரவன் செட்டியார், பவ. பழ. ராம. அழகப்ப செட்டியார், ராம. அ. ராமனுதன் செட்டியார் ஆகியோர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்தச் சங்கம் கீழ்க்கண்ட விலாசத்தில் இயங்கி வருகிறது: மூவார் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம். 15, மார்த்தாண்டபுரம் முதல் தெரு, புதுக்கோட்டை. புதுக்கோட்டை மாவட்டம்.

கல்வி உதவி

இந்த அறப்பணிக் கழகத்திலிருந்து கல்விக்கு ஆண்டு ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் ஜூலை மாதத்தில் கொடுக்கப்படுகிறது. (ஜூன் வரை விண்ணப்பங்கள் அனுப்பலாம்)

திருமண உதவி

ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் ஒரு திருமணத்திற்கும், வைகாசி மாதத்தில் 2, ஆனி மாதத்தில்2, ஆவணி மாதத்தில்3, ஐப்பசி மாதத்தில் 2, கார்த்திகை மாதத்தில் 2, தை மாதத்தில் 3, பங்குனி மாதத்தில் 1, ஆக 16 திருமணங்களுக்கு - திருமணம் ஒன்றிற்கு ரூ. 3000 வீதம் ரூ. 48,000 வழங்கப்படுகிறது.

கல்வி விண்ணப்ப பாரமும், திருமண விண்ணப்ப பாரமும் புதுக் கோட்டையில் மூவார் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் அறப் பணிக் கழக அலுவலகத்தில் கிடைக்கும்.

நிபந்தனைகள்

1. உதாரணமாக பங்குனியில் திருமணம் வைத்திருந்தால் விண்ணப்பப் பாரத்தைப் பூர்த்தி செய்து தை மாதத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும். அந்த பாரத்தில் மணமக்களைப் பற்றித் தெரிந்த மூவாரில் கடை வைத்திருந்த ஒருவர் சிபாரிசு செய்து கையெழுத்திட வேண்டும்.

2. பணம் கொடுக்கும் போது பெண்ணின் தந்தை பெயருக்கு டிராப்ட் எடுத்து சிபாரிசு செய்தவர் மூலம் அனுப்பி வைக்கப்படும். உதாரணமாக ஒரு மாதத்தில் மூன்று திருமணம் என்று சொன்னால் மூன்று விண்ணப்பங்கள் வந்தால் மூன்று பேருக்கும் கொடுக்கப்படும். மூன்று விண்ணப்பங்களுக்கு மேல் வந்தால் சீட்டுக் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணம் அனுப்பி வைக்கப்படும்.

3. வேறு சங்கங்களில் பணம் வாங்கியிருந்தால், மூவார் சங்கத்தில் பணம் கொடுக்கப்பட மாட்டாது.

4. மூவாரில் கடை வைத்திருந்தவர்களும், இப்போது வைத்திருப்பவர்களும் விண்ணப்பித்தால் அவர்களுக்கு முதல் சலுகை உண்டு.

நமது வேண்டுகோள்

மலேசியாவில் நகரத்தார்கள் இது போல் 25 கோவில்களைக் கட்டியிருக்கலாம். அதற்கு இந்தியாவில் சங்கங்கள் 10இருக்கலாம். அனைத்துக் கோவில்களுக்கும் இந்தியாவில் சங்கங்கள் ஏற்பட்டால் நல்லது. இங்கு ஏற்படுத்தப்பட்ட சங்கங்களில் பத்து சங்கங்கள் இருந்தால், ஐந்து சங்கங்கள் தான் செவ்வனே இயங்கி வருகிறது. இருக்கின்ற எல்லாச் சங்கங்களும் நன்கு இயங்க வேண்டும். மலேசியாவில் உள்ள கோவில்களில் கோடிக்கணக்கில் பணம் இருக்கிறது. ஆனால் இங்கு வந்த -தோ இலட்சக்கணக்கில் தான். ஒவ்வொரு கோவிலிலும் இருக்கின்ற சொத்துக்களில் பாதி வந்தால் இந்தியாவில் இன்னும் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்யலாம். நகரத்தார்கள் கையிலிருந்து பணம் கொடுக்காவிட்டாலும் இது போன்ற சங்கங்களின் பணங்களை நல்ல விதமாகப் பயன்படுத்தினால் அதுவே பெரிய புண்ணியமாகும்.

— வி. என். சிதம்பரம்
ஆசிரியர்

திருக்கோஷ்டியூர் பெருமாள் கோயிலுக்கு திருப்பணிக் குழு

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோஷ்டியூரில் எழுந்தருளி அருள் பாலித்துவரும் சௌமிய நாராயணப் பெருமாள் கோயிலுக்குத் திருப்பணிக் குழு அமைக்கப் பெற்றுள்ளது.

கருங்குளம் திரு. இராம. ரெங்கநாதன் செட்டியார் அவர்கள் தலைவராகவும் தொழிலதிபர் ஒக்கூர் திரு. சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார் அவர்கள் துணைத் தலைவராகவும் மற்றும் 9 பேர் குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப்பெற்று திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த இத் திருக் கோயிலின் திருப்பணி 50 இலட்சம் ரூபாய் திட்டத்தில் நடைபெறுவதாகவும் இன்னும் ஓராண்டில் திருப்பணி முடிவுற்று குட நீராட்டு விழா நடைபெறுமென்றும் துணைத் தலைவர் திரு. இராமநாதன் செட்டியார் தெரிவித்தார்.

உரைகல்

செட்டி நாட்டில் தமிழ் வழக்கு

(ஆசிரியர் : சுப. சண்முகம். கிடைக்குமிடம் : 8, காவேரி தெரு, ராம்நகர், அம்பத்தூர், சென்னை-600 053. பக்கங்கள் 46 விலை ரூ. 4-00)

இந் நூலுள் செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொற்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. செட்டிநாட்டுப் பழமொழிகள், இணைச் சொற்கள், இரட்டைக் கிளவி, மரபுத்தொடர்கள் ஆகியனவும் தனித்தனியே தரப்பட்டுள்ளன. இம்முயற்சியை முதன்முதல் தொடங்கியவர் அமரர் **சோமலெ** ஆவார். அவர்தம் 'செட்டிநாடும் செந்தமிழும்' நூலில் பின்னிணைப்பாக இதைத் தந்தார். கரிசல் பகுதி வட்டார வழக்கில் நாவல் கதையெழுதும் இ. ராஜநாராயணன் ஓர் அகராதி தந்துள்ளார். அந்த அளவு பெரிய நூலாகவும் தொகுக்க இடமிருக்கிறது. இம் முயற்சிகளைத் தொடர்வார் செய்யத்தக்க பெரும்பணிக்கு, இதனை முன் மாதிரியாகக் குறிப்பிடலாம்.

பெரியவர் சுப. சண்முகம் அவர்கள் தம் அறுபான் ஆண்டு அகவை நிறைவை ஒட்டி இச் சிறு நூலை வெளியிட்டுள்ளார்கள். இவர்களும் அன்பர் பழ. அண்ணமலை அனையாரும் இன்று நடைமுறையில் தமிழாய்வு செய்து வருகின்றனர். செட்டிநாட்டில் இத் தகைய தமிழாய்வு, சமூக ஆய்வு, சமயப் பண்பாட்டாய்வுகட்கு நிரம்ப வாய்ப்புளது.

'செத்தாத் தெரியும் செட்டியார் நாத்தம்,' 'எலிக்குச்சானாலும் தனிக்குச்சு வேணும்,' 'கோடு எடுத்த வீடு ஓடு எடுத்துப் போச்சு' என இவ்வாறு செட்டி நாட்டில் வழங்குகிற. செட்டியார் சமூகத்தைப் பிரதிபலிக்கிற பழமொழிகளை இதில் பார்க்கிறோம். அலக்குடுப்பு, அடர்த்தி (சீட்டாட்டம்), அடியிடுதல் (தடுக்குமிடைதல்), ஈரட்டு (இரண்டு நிலை), உடுப்புப் பெட்டி என வரும் பல சொற்கள் நகரத்தார் மரபில் மிகவும் புழங்குபவை.

பொதுவாக இந்நூலைப் படிக்கும் இளைஞர்கள் இம்முயற்சியில் மேலும் ஈடுபட, இது தூண்டுகோலாக உதவும். செட்டிநாட்டில் வழங்கும் வட்டாரச் சொல், இணைச்சொல், மரபுத்தொடர், இரட்டைக் கிளவி, பழமொழி, உறவுமுறைச் சொல், தொழில் முறைச் சொல் (வட்டித்தொழில்), சடங்குச் சொல், போன்றவற்றை நகரத்தார் குரலுக்கு எல்லோரும் எழுதி அனுப்பினால், சிறப்பாக வெளியிடலாம். பலர்கூடித் தேரிழுப்போம் வாருங்கள்!

— அண்ணல்

''நகரத்தார் குர''லில் நூல் மதிப்புரை வேண்டுவோர் நூலின் இரண்டு படிகளை ஆசிரியருக்கு அனுப்ப வேண்டும்.

துலாவூரில் மாதாந்திர குரு பூசை

துலாவூர் ஆதீனத்தில் ஆதிகுரு ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகரின் குரு பூசையினை ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி கழிந்த பிரதமை திதியில் அபிஷேக ஆராதனையுடன் கொண்டாடக் காரைக்குடி திருமதி அழகம்மை ஆச்சி அவர்கள் ரூ. 1500 நிரந்தர நிதி வழங்கியுள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் முதலாவது மாதாந்திர குருபூசை 3-11-90 அன்று சிறப்பாக நடைபெற்றது. இதனைக் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் தொடங்கி வைத்தார். அபிஷேக ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. இனி மாதம்தோறும் இது நடைபெறும் எனத் தெரிவிக்கப் பெற்றுள்ளது.

வேலை வாய்ப்புக்கு உதவ முன்வரும் "அமுதசுரபி"

நாட்டுக்கோட்டை நகரத்தார் இனத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்கள், பெண்கள் தங்கள் தகுதிக்கேற்ப வேலைகள் கிடைக்காமல் இருக்கலாம். சிலர் பட்டதாரியாக இல்லாவிட்டாலும், சில வேலைகளுக்கு அவர்கள் தகுதி படைத்தவர்களாகவும் இருக்கலாம். இவ்விரு வகையினரும் எத்துணை பேர்கள் இருக்கின்றனர் என்பது அறியாத நிலையிலேயே இன்றுவரை இருக்கிறது. இவ்விபரங்களை "அமுதசுரபி" என்ற அமைப்பு திரட்டி ஒல்லும் வகையில் உதவிடத் திட்டமிட்டுள்ளது. எனவே வேலை வாய்ப்பின்றி அல்லலுறும் நகரத்தார் இளைஞர்கள், பெண்கள் தம்வயது கல்வி, தகுதி அனுபவம், விரும்பும் பணி, முகவரி முதலியவைகளை எழுதிப் பின்வரும் முகவரிக்கு 31-12-90 க்குள் அனுப்ப வேண்டுகிறோம். நேரிடையாகத் தொடர்பு கொள்வதைக் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டுகிறோம்.

"அமுதசுரபி"
மே/பா "நகரத்தார் குரல்"
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி

ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரெங்கநாத சுவாமி ஆலயத்தில் 18-12-90 அன்று வைகுண்ட ஏகாதசி விழாத் தொடங்குகிறது. 27-12-90 அன்று மோகினி அலங்கார விழா. 28—12—90 (வெள்ளி) வைகுண்ட ஏகாதசியன்று மூலவருக்கு முத்தங்கி அலங்காரம் செய்யப்படுமென்றும் முத்தங்கி சேவை ஒரு வார காலம் நடைபெறுமென்றும் தேவஸ்தானம் அறிவித்துள்ளது.



காரைக்குடி திரு. சிவ. லெ. சிவ, வெங்கடாசலம் செட்டியார் - திருமதி மீனாட்சி ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 25-10-90 அன்று பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயிலில் சிறப்பாக நடைபெற்றது.

சபரிமலேயில் நகர விடுதி

ஸ்ரீ ஐயப்பன் அருள் வழங்கும் சபரிமலேயில் நகர விடுதி அமைக்கும் பணியில் தேவகோட்டை திரு. தி. சு. பள. ப. சித. வள்ளியப்ப செட்டியார், திரு. முத்து கரு. மு. முத்தையா செட்டியார் (தமிழ்நாடு ஐயப்ப சேவா சங்கத் துணைத் தலேவர்.) காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் ஆகியோர் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் ஏற்படவிருக்கும் அந்த நகர விடுதி அமைப்புச் செயற்குழு அமைக்கப்பெற்று வருகிறது. விரைவில் சபரிமலேயில் நகரவிடுதி அமைய ஸ்ரீ ஐயப்பன் அருள் புரியவும். நகரத்தார்கள் இயன்ற அளவு பொருள் உதவி புரியவும் காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வேண்டுகோள் விடுக்கிருர்.

திருமணம்

ஒக்கூர் திரு. வீர. ராம. ராம. சிதம்பரம் செட்டியாரின் புதல்வி செல்வி விஜயலெட்சுமிக்கும் அலவாக்கோட்டை திரு. தெ. மு. ராம. ராம. அண்ணுமலேச் செட்டியாரின் புதல்வன் செல்வன் மீனுட்சி சுந்தரத்திற்கும் 5-11-90 அன்று ஒக்கூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

கீழப்பூங்குடி திரு. கூ. க. வயி. சொ. கண்ணப்ப செட்டியாரின் புதல்வன் செல்வன் சுப்பிரமணியன் B. Com. க்கும் நாட்டரசன்கோட்டை திரு. ச. ராம. ராம. கண்ணப்ப செட்டியாரின் புதல்வி செல்வி மீனுட்சிக்கும் 5-11-90 அன்று நாட்டரசன்கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

நகரத்தார் பற்றி தமிழ்க்குடிமகன்

60 ஆண்டுகளுக்கு முன்பாக நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் பர்மா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார்கள். அப்படி வாழ்கின்றபோது பண்பு மாருமல் தமிழர்களுடைய நாகரிகத்தை வெளிநாடுகளில் பரப்பினுர்கள். அப்போது பர்மாவிலிருந்து தேக்கு மரங்களேக் கொண்டுவந்து செட்டிநாட்டிலே அரண்மனே போல வீடுகளேக் கட்டினுர்கள். முதலில் தங்கள் வருவாயிலே ஆலயத்தைக் கட்டினுர்கள். அதன்பிறகு மருத்துவமனே, பள்ளிகள், கல்லூரிகளேயும் ஏற்படுத்தி பல்கலேக் கழகத்தையும் உருவாக்கினுர்கள். வெளிநாட்டு வாணிபம் குறைந்த பிறகு சற்று க்ஷீண நிலேக்கு வந்தார்கள். அப்பொழுது அரண்மனே போன்ற வீடுகளில் இருந்த நிலேகளேக் கூட பிரித்து விற்ருர்கள். அப்படி க்ஷீண நிலேயில் இருந்தபோது கூட பண்பு மாருமல் இருந்து வந்தார்கள். அப்படிப்பட்ட பண்பாளர்களின் வழிவந்த இராம. நாராயணனின் புதல்வி சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறேன்.

— மு. தமிழ்க்குடிமகன்

(தமிழகச் சட்டப் பேரவைத் தலேவர்)

(சட்டமன்ற உறுப்பினர் திரு. இராம. நாராயணன் புதல்வியின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில்)

துடிப்புமிக்க இளைஞர்

படத்தில் காணும் மாணவர் சோ. ராமு சரவணன் வேகுப்பட்டியைச் சேர்ந்த திரு. இராம. சோலையப்பன் - திருமதி மீனாள் ஆச்சியின் புதல்வராவார். துடிப்பும் ஆர்வமும் உள்ள இந்த 13 வயது இளைஞர் கடந்த ஜூன்'90ல் வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமியின் தலைமையில் செட்டிநாட்டு



ஊர்கள் 76க்கும் சென்ற சைக்கிள் பேரணியில் கலந்து கொண்டு சமூக சேவையில் ஈடுபட்டார். சைக்கிள் பேரணியில் சென்ற இளைஞர்களில் இவர் வயது குறைந்தவராவார். மதுரை தியாகராசர் நன்முறைப் பள்ளியில் 9ஆம் வகுப்புப் படித்துவரும் இவர் தேசிய மாணவர் படை (N C. C.) யில் உதவிக் கமாண்டருமாவார்.

மணி விழா

நாட்டரசன்கோட்டையில் திரு. இராம. அருணகிரிச் செட்டியார் - திருமதி மெய்யம்மை ஆச்சியின் மணி விழா 25-11-90 அன்று சிறப்பாக நிகழ்ந்தது. அதனையொட்டி ''தென்பனசை என்னும் நாட்டரசன்கோட்டை தேசிக விநாயகர் பிரபந்தத் திரட்டு'' ''இளமையில் கற்ற வழிகாட்டி நூல்கள்'' என்ற இரண்டு நூல்களை மணி விழா நாயகர் அன்பளிப்பாக வெளியிட்டுள்ளார். இந் நூல்களின் வெளியீட்டு விழாவும் வாழ்த்தரங்கமும் 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர் திரு. இராம. சிவசுப்பிரமணியன் வரவேற்றார். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் மேற்படி நூல்களை வெளியிட்டு வாழ்த்தினார். பேராசிரியர் திரு. சுப. இராமநாதன் செட்டியார் நூலின் முதல் பிரதிகளைப் பெற்றுக் கொண்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் திரு. ஆர்ஏம் சேதுநாராயணன் பாராட்டிப் பேசினார்.

சபரிமலைத் திருவிழா விவரம்

சபரிமலை அய்யப்பன் கோவிலில் இந்த ஆண்டு நடைபெறும் மகரவிளக்கு, திருவிழா விவரங்களை திருவாங்கூர் சமஸ்தானம் அறிவித்துள்ளது.

அதன் விவரம் :-

திருவிழா : 11-12-90 முதல் 20-12-90 வரை

மகர விளக்கு 1-1-91 முதல் 20-1-91 வரை

மகர விளக்கு : 14-1-91

மாதாந்திர பூஜை : 13-2-91 முதல் 17-2-91 வரை

பங்குனி உத்திரம் 29-3-91

மாதாந்திர பூஜை 11-4-91 முதல் 18-4-91 வரை.

விசு : 15-4-91

மாதாந்திர பூஜை 15-5-91 முதல் 19-5-91 வரை.

மாதாந்திர பூஜை 15-6-91 முதல் 19-6-91 வரை.

மாதாந்திர பூஜை 17-7-91 முதல் 21-7-91 வரை.

ஆசிரியருக்குக் கடிதம்

''நகரத்தார் குரல்'' ஆசிரியர் அவர்களுக்கு. வணக்கம்.

கோட்டையூர் வேலங்குடி நகரக் கோவில் மிகவும் மோசமான நிலைமையில் உள்ளது. தற்போதைய நிர்வாகம் சரியாக இல்லை. இப்படியே போனால் நகரக் கோவில்களில் ஒன்றை இழந்துவிடக்கூடிய நிலைமை ஏற்படலாம். உண்மை நிலைமையை தங்களுடைய துணை ஆசிரியர்களை அனுப்பித் தெரிந்து கொள்ளலாம். வேலங்குடி நகரக் கோவிலைச் சேர்ந்த பங்காளிகள் அனைவரையும் ஒன்று சேர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆவன செய்தால் நல்லது. இத்தொண்டு நகரத்தார்களுக்கும் நகரக் கோவில்களுக்கும் செய்யும் மாபெரும் தொண்டாகும். வேலங்குடி நகரக் கோவிலைச் சேர்ந்த நகரத்தார்கள் இரண்டு பிரிவாக உள்ளனர். அனைவரையும் சந்திக்க ஏற்பாடு செய்து கோவிலை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர தாங்கள் முயற்சி மேற்கொள்ள விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஐயா, நான் எழுதியுள்ள கடிதத்தில் கையெழுத்து, பெயர் விலாசம் எதுவுமில்லை என நினைக்க வேண்டாம். அந்தக் கோவிலைச் சேர்ந்த பங்காளிகளில் ஒருவனை நான் மனம் நொந்த நிலைமையில் இதைத் தங்களுக்கு எழுதுகிறேன்.

காலமானார்



கீழச்சிவல்பட்டி பி. அளகாபுரி க. தெ. நா. ராம. தெ. தேனப்ப செட்டியார் அவர்கள் 28-10-90 அன்று சிவபதவி அடைந்தார்கள். கொட்டகைக்காரத் தேனப்ப செட்டியார் என்று அழைக்கப்படும் இவர்கள் உள்ளூரில் கோவில்களுக்கு பல பணிகள் செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தோற்றம் : 24—2—1908

மறைவு : 28—10—1990

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001லிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்.

பதினோறாவது ஆண்டு நினைவாஞ்சலி.

தோற்றம்:
29-12-1924



மறைவு:
26-12-1979


திரு. ஏ ஆர். இராமசாமி செட்டியார் அவர்கள்

முன்னாள் நிர்வாக இயக்குநர்	: ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்
முன்னாள் இயக்குநர்	: தி நெல்லை ஃபைனான்ஸ் (பி) லிமிடெட்
முன்னாள் இயக்குநர்	: அருண கெமிக்கல்ஸ் பார்ப்ஸ் (பி) லிமிடெட்
முன்னாள் உரிமையாளர்	: ஸ்ரீ விசாலம் பைனான்சியர்ஸ்
முன்னாள் நிர்வாக உரிமையாளர்	: ஸ்ரீ கோகுலம் பண்ணைகள்
முன்னாள் அறங்காவலர்	: ஸ்ரீ விசாலம் அறக்கட்டளை


ஓங்கு புகழ் விசாலம் சிட் பண்ட் சிறக்க
பாங்குடன் பணி செய் அன்பர் - நீங்கா
நினைவுடன் இணையிலா நின் தாளில்
பணிவுடன் வைத்தோம் அஞ்சலி.

என்றும் தங்கள் நினைவை மறவாத :

மகன் : ராம. அருணாசலம், மருமகள்,
மகள்கள், மருமகன்கள், பேரக் குழந்தைகள்
மற்றும் மேற்கண்ட நிறுவனங்களின் அலுவலர்கள்.



"நகரத்தார் குர"லின் துணை ஆசிரியர் திரு. எல். சுந்தரத்தின் புதல்வன் செல்வன் லெட்சுமணன் - செல்வி அலமேலுவின் திருமண வாழ்த்தரங்கில் (22-11-90) "நகரத்தார் குர"லின் ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமை ஏற்று வாழ்த்துரை வழங்கும் காட்சி. அருகே முன்னிலை வகித்த 'இலக்கியச் சிந்தனை' ப. லெட்சுமணன் அவர்களும் "கல்கண்டு" இதழின் ஆசிரியர் லேனா தமிழ்வாணன் அவர்களும் உள்ளனர்.



மேற்படி வாழ்த்தரங்கில் லேனா தமிழ்வாணன் அவர்கள் தலைமை ஏற்க 'இலக்கியச் சிந்தனை' ப. லெட்சுமணன் அவர்கள் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.